விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

MoneyGram
Ria
WESTERN UNION WU
Moving Money for better
உறவுகளிடமிருந்து Western Union, MoneyGram, Ria மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள...
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப...
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்
அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 2670 Fax: 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:Srimurugan09@gmail.com
(C-2412)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 14 வெள்ளிக்கிழமை (30.07.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 223

### பிரதேச செயலக உத்தியோகத்தர் உட்பட
## கொரோனா வைரஸ் தொற்றால் யாழ்ப்பாணத்தில் மூவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் மேலும் மூவர் கோவிட்-19 தொற்றினால் நேற்று உயிரிழந்துள்ளனர்.

யாழ்ப்பாணம்போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஆனைக்கோட்டையைச் சேர்ந்த 79 வயதுடைய பெண் ஒருவரும் திருநெல்வேலியைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவரும் நேற்று உயிரிழந்துள்ளனர். 19

### வட மாகாணத்தில் நேற்று
## 40 ஆயிரத்து 391 பேர் தடுப்பூசி பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் நேற்றைய தினம் 40 ஆயிரத்து 391 பேர் கோவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டனர் என்று மாகாண 19

### வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்கு முன்
# காணி அபகரிப்பை எதிர்த்து அணிதிரண்ட பொதுமக்கள்



### வாக்குறுதியையடுத்து போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் கோட்டாபய கடற்படை முகாமுக்காக பொதுமக்களின் காணி அபகரிப்பு முயற்சி பல மணிநேர போராட்டத்துக்கு பின் முடிவுக்கு வந்தது.

காணி அளவிடமாட்டோம் என்ற வாக்குறுதியையடுத்து பல மணிநேரமாக இடம்பெற்ற போராட்டம் தற்காலிகமாக முடிவுக்கு வந்தது. (19ஆம் பக்கம் பார்க்க)

## கோவிட் தொற்றால் மேலும் 66 பேர் பலி
### மொத்த உயிரிழப்பு 4,324 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கோவிட் தொற்றால் 66 பேர் உயிரிழந்துள்ளனர். 19

### யாழில் 50 பேர் உட்பட
## வடக்கில் 79 பேருக்கு கொரோனாத் தொற்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 50 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் 79 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில்நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் 19

### தர்மபுரத்தில்
## கால்வாயில் தவறிவிழுந்த குடும்பஸ்தர் பலி

(தர்மபுரம்)

தர்மபுரம் பகுதியில் கால்வாயில் தவறிவிழுந்த குடும்பஸ்தர் ஒருவர் 19

## நாளாந்த தொற்று 2 ஆயிரத்தை கடந்தது
### நேற்றும் 2,329 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில் மேலும் 2,329 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, நாட் 19

## தடுப்பூசி போடாமல் ஒழிந்திருப்போரை இனங்காண விசேட நடவடிக்கை



### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

(கொழும்பு)

நாட்டில் அனைத்து மக்களும் தடுப்பூசி போடவேண்டும் என அரசாங்கம் அறிவித்து அனைத்து மாவட்டங்களிலும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தடுப்பூசி போடாமல் 19

### அக்கராயனில்
## விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் பலி

(முல்லைத்தீவு)

அக்கராயன் பொலிஸ் பிரிவுக்கு 19

### முல்லைத்தீவு மாவட்டத்தில்
## கோவிட் - 19 தொற்றால் வயோதிபர் மரணம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு வண்ணாங்குளத்தினை சேர்ந்த வயோதிபர் ஒருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு நகர் வண்ணாங்குளத்தினை சேர்ந்த 61 வயதுடை 19

### ஊரெழு இளைஞன்
## சுன்னாக தோட்ட கிணற்றில் நேற்று சடலமாக மீட்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குட்டிப்புலம் பகுதியில் உள்ள தோட்டக் கிணற்றில் இருந்து உருக்குலைந்த நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சுன்னாகம் மேற்கு 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்திக்குத்தில் முடிந்த ஒருதலைக் காதல் விவகாரம்

## யாழ். அரச திணைக்களத்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

ஒருதலைக் காதல் விவகாரத்தால் சகபெண் உத்தியோகத்தரை கத்தியால் குத்திய நபர், தானும் தன்னைத்தானே கத்தியால் குத்தி தற்கொலைக்கும் முயன்றுள்ளார். குறித்த சம்பவத்தில் காயமடைந்த இருவரும் யாழ். போதனா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

யாழில் உள்ள அரச திணைக்களம் ஒன்றில் நேற்றைய தினம் நடைபெற்ற குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

திணைக்களத்தில் பணியாற்றிவரும் ஆண் உத்தியோகத்தர் , அங்கு கடமை புரியும் சக பெண் உத்தியோகத்தர் ஒருவரை ஒரு தலையாகக் காதலித்து வந்துள்ளார். அவரின் காதலை பெண் உத்தியோகத்தர் ஏற்க மறுத்து வந்த நிலையில், அவர் அப்பெண்ணுக்கு தொந்தரவு கொடுத்து வந்துள்ளார். தொந்தரவு தாங்கமுடியாத அப்பெண் ஒரு கட்டத்தில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டின் பிரகாரம் , விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் ஆண் உத்தியோகத்தரை அழைத்து கடுமையாக எச்சரித்து அனுப்பிவைத்துள்ளனர். இந்நிலையில் நேற்றைய தினம் அலுவலகத்தில் இருவரும் கடமையில் இருந்துள்ளனர். திடீரென ஆண் உத்தியோகத்தர், பெண் உத்தியோகத்தர் மீது சரமாரியாக கத்தியால் வெட்டிவிட்டு, அலுவலக மலசல கூடத்திற்குள் சென்று தாழிட்டுள்ளார்.

சம்பவத்தை அடுத்து இரத்த வெள்ளத்தில் கிடந்த பெண் உத்தியோகத்தரை, அங்கு கடமையில் இருந்த சக உத்தியோகத்தர்கள் மீட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அதேவேளை, அப்பகுதியால் சிவில் உடையில் சென்ற பொலிஸார் சம்பவம் தொடர்பில் அறிந்து அலுவலகத்திற்குள் சென்று இருந்தபோது, கத்தியால் வெட்டிய நபர் மலசல கூடத்திற்குள் தாழிட்டு இருப்பதனை அறிந்து, அவரை வெளியே வருமாறு அழைத்துள்ளனர். எந்த சத்தமும் இல்லாத நிலையில் கதவினை உடைத்து திறந்தபோது, அந்நபர் தன்னை தானே கத்தியால் குத்திக்கொண்ட நிலையில் இரத்த வெள்ளத்தில் கிடந்துள்ளார்.

அவரை அங்கிருந்து மீட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தனர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். அதேவேளை, கத்தியால் குத்திய நபரின் அலுவலக மேசை லாச்சியினுள் வேறொரு கத்தியும், மற்றுமொரு கூரிய ஆயுதமும் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-33)


**மணமகன் தேவை**

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். (7223)

☎-070 640 5951

e-mail : engchelvam@gmail.com


### யாழில் 66 வயதான பெண்ணுக்கு

# இரு கைகளிலும் ஏற்றப்பட்ட தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 30 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நிலையில்,

யாழ். சென். ஜோன்ஸ் கல்லூரியில் அமைந்துள்ள கொரோனா தடுப்பூசி வழங்கும் மையத்தில் கொழும்புத்துறை J/61 பிரிவைச் சேர்ந்தவர்களுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

இதே பிரிவைச் சேர்ந்த 66 வயது பெண்ணுக்கு இரு கையிலும் தடுப்பூசி ஏற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

பெண்ணின் ஒரு கையில் தாதி ஒருவர் ஊசி போட்டுவிட்டு உடனடியாக அங்கிருந்து சென்றுவிட இது தெரியாமல் இன்னொரு தாதி அங்கு வந்து மற்ற கையிலும் ஊசி போட்டுள்ளார்.

தவறுதலாக இடம்பெற்றுவிட்டதாகவும் உடலில் உபாதை ஏற்பட்டால் அறிவிக்குமாறும் கூறி அனுப்பி வைத்துள்ளனர். (ம)

# ரூ. 20 மில்லியன் பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

பாதுக்கை, மீகொட பகுதியில் வைத்து ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர்களிடம் இருந்து 2 கிலோ 450 கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஹெரோயின் 20 மில்லியன் ரூபா பெறுமதியுடையவை என தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# விஷேட வைத்திய நிபுணர் ஒருவருக்கு கொரோனா

(கொழும்பு)

விஷேட வைத்திய நிபுணர் ஜயருவன் பண்டாரவுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இவர் தற்போது வீட்டில் சிகிச்சை பெற்றுவருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவர் முதலாவது தடுப்பூசியாக அஸ்ட்ராசெனேகாவையும், இரண்டாவது டோஸாக பைஸர் தடுப்பூசியையும் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ம)

# மரண அறிவித்தல்

மலர்வு
22
06
1989



உதிர்வு
29
07
2021

**திரு. பாலசுப்பிரமணியம் செந்தூரன்**

( ஆசிரியர் – யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி )

யாழ். கச்சாய் தெற்கு கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் புலுட்டையன் பிள்ளையார் வீதி, கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. பாலசுப்பிரமணியம் செந்தூரன் நேற்று (29.07.2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் - சரோஜாதேவி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் முருகையா - சந்திராதேவி தம்பதியரின் அன்பு மருமகனும் சௌமியாவின் (தபாலதிபர் - தபாலகம், சாவகச்சேரி) அன்புக் கணவரும் அக்ஷைனியின் அன்புத் தந்தையும் அபிராமி (பிரான்ஸ்), ஐங்கரன் (பொலிஸ் உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஈஸ்வரன் (பிரான்ஸ்), பவித்திரா (ஆசிரியை - முல்லைத்தீவு பாரதி வித்தியாலயம்), பிரசன்னா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கச்சாய் எறியால்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2435)

கச்சாய் தெற்கு, கொடிகாமம். 077 170 3812 ( சகோதரன் ) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



**இயக்கோமுத்து ஜோர்ஜ் அரியநாயகம்**

கரவெட்டியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இயக்கோமுத்து ஜோர்ஜ் அரியநாயகம் நேற்று (29.7.2021) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பிரான்சிஸ்பிள்ளை இயக்கோமுத்து - கத்தரினாப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை - சிசிலியா தம்பதியரின் அன்பு மருமகனும் லலிதாவின் அன்புக் கணவரும் லீலா தயானந்தன், இராயன், மாலா யோகேந்திரன், ஜோன்சன், வில்சன் ஆகியோரின் அன்புத் தந்தையும் தயானந்தன், இரஜினி, யோகேந்திரன், வின்சுலா, விஜி ஆகியோரின் அன்பு மாமானாரும், சஜீவ், சுஷ்மித்தா, அஜந்தா, ஜோர்ஜ், பற்றிக் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (30.07.2021) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கரவெட்டி சேமக்காலையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (C-2436)

இல. 93, கொடிகாமம் வீதி, நெல்லியடி. தகவல்:- குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா பாதிப்பு உலகளவில் திடீர் அதிகரிப்பு!

## உலக சுகாதார அமைப்பு தகவல்

(ஜெனிவா)

**உலக அளவில் கொரோனா 2 ஆவது அலை கட்டுக்குள் வந்து கொண்டு இருக்கும் நிலையில் தற்போது திடீரென பாதிப்பு அதிகரித்துள்ளது என உலக சுகாதார அமைப்பு அச்சம் தெரிவித்துள்ளது.**




கொரோனா அதிகரிப்பு குறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது,

கடந்த வாரம் 69 ஆயிரம் கொரோனா உயிரிழப்புகள் நடந்துள்ளன. இவற்றில் பெரும்பாலானவை அமெரிக்கா மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ளன.

கொரோனா புதிய பாதிப்புகள் 8 சதவீதம் அதிகரித்துள்ளது. உலகம் முழுவதும் மொத்த பாதிப்பு 19 கோடியே 56 இலட்சத்தை தாண்டி விட்டது.

இதே ரீதியில் சென்றால், இன்னும் 2 வாரங்களில் 20 கோடியை மிஞ்சிவிடும். அமெரிக்கா, பிரேசில், இந்தோனேசியா, இங்கிலாந்து, இந்தியா ஆகிய நாடுகளில் புதிய பாதிப்பு அதிகமாக இருக்கிறது.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

உலக அளவில் 19.5 கோடி பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 41.8 இலட்சம் பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

## மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்து நிபந்தனைகளுடன் ஆரம்பம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றை அடுத்து தடைப்பட்டிருந்த மாகாணங்களுக்கிடையிலான போக்குவரத்துச் சேவை எதிர்வரும் ஒகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து மீள ஆரம்பிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இதன்படி தனியார் மற்றும் அரச பேருந்து சேவைகளை வருகின்ற ஒகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் மாகாணங்களுக்கு இடையே மீண்டும் நடத்த அனுமதியளிப்பதாக போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

அலுவலக சேவை நேரங்களில் மாத்திரம் இந்த பேருந்து போக்குவரத்தை நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் பல்வேறு நிபந்தனைகளும் விதிக்கப்படும் என்றும் அவர் நேற்று தெரிவித்தார். (நி-5)

## தடுப்பூசி பெற்றால் மட்டுமே பேருந்தில் பயணிக்கலாம்

### மறுக்கிறார் பண்டுக



(கொழும்பு)

கொவிட் -19 தடுப்பூசி பெற்றுக் கொண்டவர்கள் மாத்திரம் தான் பேருந்துகளில் பயணம் செய்ய முடியும் என போக்குவரத்து திணைக்களம் இதுவரையில் அறிவிக்கவில்லை.

பொதுமக்கள் தங்களின் சுய பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வது அவசியமாகும் என போக்குவரத்து திணைக்கள பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக தெரிவித்தார்.

மாகாணங்களுக்கிடையிலான பொதுபோக்குவரத்து சேவை ஆரம்பிக்கும்போது கடைப்பிடிக்க வேண்டிய சுகாதார பாதுகாப்பு அறிவுறுத்தல் குறித்த வழிகாட்டல் சுகாதாரத் தரப்பினரால் இன்று வெளியிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

## 20 ஆம் திருத்தச் சட்டத்தை ரத்து செய்ய வேண்டும் ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

நாட்டை மீட்டெடுக்க வேண்டுமாயின் 20 ஆம் திருத்தச் சட்டத்தை இரத்து செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இரசாயன உரங்களை தடை செய்வது உள்ளிட்ட அரசாங்கத்தின் எதேச்சதிகார தீர்மானங்களை இரத்து செய்யாவிட்டால் எதிர்வரும் காலங்களில் உணவுத் தட்டுப்பாட்டை தவிர்க்க முடியாது என அக்கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

தற்பொழுது நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு புத்திஜீவிகள் எனக் கூறிக் கொள்ளும் தரப்பினரும் பொறுப்புச் சொல்ல வேண்டுமெனவும் இந்த பிழையைத் திருத்திக்கொள்ள வேண்டுமாயின் ஐக்கிய தேசியக் கட்சி போன்றதொரு அரசியல் கட்சியுடன் இணைந்து கொண்டு செயற்பட வேண்டுமெனவும் அவர் ஊடகங்களிடம் தெரிவித்துள்ளார். (நி-5)

## இரு தடுப்பூசிகளைப் பெற்றால் ஆசன எண்ணிக்கைக்கு ஏற்ப பயணிகளுக்கு அனுமதி

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் விமானத்தில் அழைத்து வரக்கூடிய பயணிகள் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்தி இருந்தால் பயணிகளின் எண்ணிக்கை தொடர்பில் பிறப்பிக்கப்பட்டிருந்த கட்டுப்பாட்டை நீக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் செலுத்தி 14 நாட்களை கடந்த பயணிகளை விமானத்தின் ஆசன அளவிற்கு ஏற்ப இலங்கைக்கு அழைத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும் தடுப்பூசியின் ஒரு டோஸை செலுத்திக் கொண்ட மற்றும் தடுப்பூசி செலுத்திக் கொள்ளாத பயணிகளை அழைத்து வரும் விமானத்தில் 75 பேர் மாத்திரமே இருக்க வேண்டும் எனவும் அவர்கள் இலங்கை வருகை தந்த பிறகு 14 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அன்டிஜன் பரிசோதனை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிர்வரும் 3 ஆம் திகதி கொவிட் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளும் நடவடிக்கையொன்றை மேற்கொள்ள இருப்பதாகவும் விருப்பமானவர்கள் மாத்திரம் இதில் கலந்து கொள்ளலாம் எனவும் பாராளுமன்ற படைக்கல சேவிதர் நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கொரோனா அன்டிஜன் பரிசோதனை பாராளுமன்ற வளாகத்தில் இதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

இதன்போது இந்த பரிசோதனைக்கு 5 பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே கலந்து கொண்டனர்.

பாராளுமன்றம் எதிர்வரும் 3 ஆம் திகதி கூடுகின்ற நிலையில், அந்தச் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற உறுப்பினர்கள் கொவிட் அன்டிஜன் பரிசோதனையில் கலந்து கொள்ள முடியும்.

இதேவேளை, பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு சிலரைத் தவிர ஏனைய அனைத்து உறுப்பினர்களும் கொவிட் தடுப்பூசி பெற்றுக் கொண்டுள்ளதாகவும், நரேந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்கள் 15 இற்கும் மேற்பட்டவர்கள் கொவிட் வைரஸ் தொற்றுக்கு ஆளாகி இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்திய அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20-போராடி வென்றது இலங்கை




இந்திய அணிக்கெதிரான இரண்டாவது இருபது-20 போட்டியில், இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரை இலங்கை அணி, 1-1 என்ற கணக்கில் சமநிலைப்படுத்தியுள்ளது.

கொழும்பு- ஆர்.பிரேமதாஸ மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்தியக் கிரிக்கெட் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 132 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஷிகர் தவான் 40 ஓட்டங்களையும் தேவ்தத் படிக்கல் 29 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், அகில தனஞ்சய 2 விக்கெட்டுகளையும் துஷ்மந்த சமீர, வனிந்து ஹசரங்க, தசுன் சானக ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 133 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இலங்கை கிரிக்கெட் அணி, 19.4 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகள் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்தது.

இதனால் இலங்கை அணி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதகபட்ச ஓட்டங்களாக, தனஞ்சய டி சில்வா ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் மினோத் பானுக 36 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இந்தியக் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சில், குல்தீப் யாதவ் 2 விக்கெட்டுகளையும் புவனேஸ்வர் குமார், சக்கரியா, வருண் சக்கரவர்த்தி மற்றும் ராகுல் சஹார் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக, 34 பந்துகளில் 1 சிக்ஸர் 1 பவுண்ரி அடங்கலாக ஆட்டமிழக்காது 40 ஓட்டங்களையும் பந்துவீச்சில் 1 விக்கெட்டினையும் வீழ்த்திய இலங்கையின் தனஞ்சய டி சில்வா தெரிவு செய்யப்பட்டார். (4-6)

# ஒலிம்பிக் தடகளப் போட்டி

## இலங்கை வீராங்கனை இன்று பங்கேற்பு




டோக்கியோ ஒலிம்பிக் விளையாட்டு திருவிழாவின் தடகளப் போட்டிகளில் இலங்கை பங்கேற்கும் முதலாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

இதில் மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியின் தகுதிச் சுற்றில் இலங்கை வீராங்கனை நிமாலி லியனாரச்சி பங்கேற்கவுள்ளார்.

ஜப்பானில் இன்று காலை 10.49 மணிக்கு நடைபெறவுள்ள இந்தப் போட்டியானது, இலங்கை நேரப்படி காலை 7.19 மணிக்கு நேடியாகப் பார்க்கக்கூடியதாக இருக்கும்.

இதில் நாளை மற்றொரு இலங்கை வீரரான யுபுன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியின் தகுதிச் சுற்றில் பங்கேற்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-6)

# உலக சம்பியனுக்கு கொவிட்

## ஆஸி வீரர்கள் தனிமைப்படுத்தலில்




டோக்கியோ ஒலிம்பிக்கில் பங்கெடுத்துள்ள அவுஸ்திரேலிய தடகள அணியின் உறுப்பினர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

முன்னதாக கொரோனாத் தொற்றுக்கு சாதகமாக பரிசோதனை மேற்கொண்ட அமெரிக்காவின் உயரம் பாய்தல் வீரர் சாம் கென்ட்ரிக்ஸ்டன் நெருங்கிய தொடர்புகளை பேணியதன் காரணத்தினாலேயே அவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் அவுஸ்திரேலிய ஒலிம்பிக் கமிட்டி ஒரு அறிக்கையில், விளையாட்டு வீரர்கள் தங்கள் அறைகளில் "முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக" தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் அவர்கள் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் கூறியுள்ளது.

இதனிடையே உலக சம்பியனான கென்ட்ரிக்ஸ் ஒலிம்பிக் விளையாட்டு போட்டிகளில் இருந்து விலக்கப்பட்டுள்ளார். (4-6)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# மீண்டும் சீனா முதலிடம்



2020 டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கப் பட்டியலில் சீனா மீண்டும் முதலிடத்திற்கு முன்னேறியுள்ளது.

அதன்படி 14 தங்கம், 6 வெள்ளி, 6 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 29 பதக்கங்களை சீனா வென்றுள்ளது.

இரண்டாம் இடத்திலுள்ள அமெரிக்கா, 13 தங்கம், 13 வெள்ளி, 10 வெண்கலம் அடங்கலாக மொத்தம் 36 பதக்கங்களைப் பெற்றுள்ளது.

13 தங்கம், 4 வெள்ளி, 5 வெண்கலம் அடங்கலாக மொத்தமாக 22 பதக்கங்களைப் பெற்று ஜப்பான் மூன்றாவது இடத்தை பிடித்துள்ளது.

7 தங்கம், 11 வெள்ளி, 7 வெண்கலம் என அடங்கலாக மொத்தமாக 25 பதக்கங்களுடன் ரஷ்யா நான்காவது இடத்திலுமுள்ளது.

அவுஸ்திரேலியா, பிரித்தானியா, தென்கொரியா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகள் முறையே முதல் 10 இடங்களைப் பிடித்துள்ளன. (4-6)



JKS கராத்தே கழகத்தினால் முல்லைத்தீவு மாவட்ட வீர வீராங்கனைகளுக்கு கராத்தே பயிற்சியுடனான தரப்படுத்தல் மற்றும் பட்டி வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. (படம்:-தவசீலன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4000 பேருக்கு காணி உறுதி வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

**நான்காயிரம் பேருக்கு காணி உறுதிப்பத்திரங்களை வழுங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் செப்டெம்பர் மாதத்திற்கிடையில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் காணி உறுதிப்பத்திரம் அற்றவர்களுக்கு. உறுதிப்பத்திரங்கள் வழங்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் நிலந்த விஜேசிங்க தெரிவித்தார்.



காணி உறுதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக பணத்தை செலுத்தியும் இதுவரை உறுதிப்படுத்திரம் பெற்றுக் கொள்ளாதவர் கள். தமது மாவட்ட செயலகத்திற்கு சென்று தேவையான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (நி-5)

# அனைத்து மக்களுக்கும் குடிநீர் வசதி

## பிரதமர் மகிந்த



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் அனைத்து மக்களுக்கும் குடிநீரை பெற்றுக்கொடுக்கும் திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு அமைவாக நீர் வளப் பிரதேசங்களை பாதுகாப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்தார்.

நீர் வழுங்கல் அமைச்சின் அதிகாரிகளுடன் அலரி மாளிகையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

அதற்கமைய நீர் வளப் பிரதேசங்களை பாதுகாப்பதற்கு சுற்றாடல் துறை அமைச்சுடன் இணைந்து வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்குமாறு பிரதமர் இதன்போது நீர் வழுங்கல் அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழுங்கினார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், "நாடு முழுவதும் உள்ள மக்களுக்கு குடிநீரை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டத்தை நாம் துரிதப்படுத்த வேண்டும். குடிநீர் இன்மையால் வறண்ட பிரதேச மக்கள் பாரிய இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்த குடிநீர் திட்டங்களுக்காக வெளிநாட்டு நிதி உதவிகளையோ அல்லது மானியங்களையோ பெற்றுக்கொள்ள முடியும்.

சுற்றாடலை பாதுகாப்பது போன்றே புதிதாக மரக் கன்றுகளையும் நட வேண்டும்.

அதேபோன்று நீர் வளப் பிரதேசங்களை பாதுகாப்பதற்கான வேலைத்திட்டமொன்றை முறையாக செயற்படுத்த வேண்டும்.

அதற்கு சுற்றாடல் துறை அமைச்சுடன் இணைந்து வேலைத்திட்டமொன்றை முன்னெடுங்கள் எனப் பிரதமர் தெரிவித்தார். (நி-5)

# சுகாதார பாதுகாப்பு கட்டுப்பாடுகள் சுகாதார அமைச்சினால் தளர்த்தப்படவில்லை



(கொழும்பு)

நாட்டில் கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான முழுப் பொறுப்பும் அதிகாரங்களும் சுகாதார அமைச்சிடம் வழங்கப்பட்டிருந்தால், தற்போது நிலைமை இந்தளவிற்குத் தீவிரமடைந்திருக்காது.

ஆனால் சுகாதாரப்பாதுகாப்புக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் உள்ளடங்கலாக அனைத்துத் தீர்மானங்களும் அரசியல் மயமாக்கப்பட்டதன் விளைவாக எமது நாடு மிகமோசமான நிலைமையை நோக்கிப் பயணித்துக்கொண்டிருக்கிறது என பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்கத்தில் சுகாதாரத்துறை அமைச்சராகத் தனியொருவரால் முன்னெடுக்கப்பட்ட பணிகள் இப்போது நால்வரால் முன்னெடுக்கப்பட்டாலும் அதனால் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் தீவிரமடைந்து வரும் டெல்டா வைரஸ் பரவல் தொடர்பில் இலங்கை மருத்துவ சங்கத்தினால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது. நாட்டில் அடையாளங் காணப்படும் 100 கொவிட் - 19 தொற்றாளர்களில் இருவர் உயிரிழப்பதாக அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி இந்நிலை தொடருமாக இருந்தால், இன்னும் இருவார காலத்தில் எமது நாடு இந்தியாவின் நிலைக்குத் தள்ளப்படும் என்றும் அவ்வறிக்கையின் ஊடாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்த்தபோது, பொதுமக்கள் சுகாதாரப்பாதுகாப்பிற்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் சுசீ பெரேராவினால் வெளியிடப்பட்டுள்ள கருத்து தொடர்பில் விசேட கவனத்தை செலுத்தவேண்டியுள்ளது.


"உயர்மட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்ற பணிப்புரைக்கு அமைவாகவே நாட்டில் நடைமுறையிலிருந்த சுகாதாரப்பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டன. மாறாக அவை சுகாதார அமைச்சின் தேவைக்கு அமைவாகத் தளர்த்தப்படவில்லை" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதாரத்துறையினதும் மருத்துவ வசதிகளினதும் இயலுமையைப் பெருமளவால் அதிகரித்தாலும் அதனால் பயன்பெறமுடியாது. ஏனெனில் இவ்விடயத்தில் அரசியல்வாதிகளினால் அரசியல் ரீதியான தீர்மானங்களே மேற்கொள்ளப்படுகின்றன என ராஜித தெரிவித்தார். (நி-5)

**நல்லூர் ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தில் வெற்றுப் போத்தல்கள், வாகன டயர்கள், வெற்றுக்கான் 20 L, பழைய தகரங்கள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 07.08.2021 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.** (C-2434)

**தொ. இல. 021 222 2143**

# கொழும்பில் அதிகரிக்கும் தொற்றாளர்கள்




(கொழும்பு)

நேற்று முன்தினம் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களில் அதிகளவான தொற்றாளர்கள் கொழு ம்பு மாவட்டத்தில் பதிவாகி உள்ளதாக கொவிட் 19 பரவலை தடுக்கும் தேசிய செயற்பாட்டு மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய கொழும்பு மாவட்டத்தில் நேற்று முன்தினம் 596 கொவிட் தொற்றாளர்கள் பதிவாகி இருந்தனர்.

அத்துடன் களுத்துறை மாவட் டத்தில் 382 பேரும் மற்றும் யாழ். மாவட்டத்தில் 122 பேரும் தொற்றுக்கு உள்ளாகி இருந்தனர். (நி-5)

# இலங்கைக்கு விதித்த தடை நீடிப்பு

(கொழும்பு)

இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் இருந்து பிரவேசிக்கும் பயணிகள் விமானங்களுக்காக ஐக்கிய அரபு இராச்சியம் விதித்திருந்த தடை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

டுபாயின் முன்னணி விமான சேவை நிறுவனமான எமிரேட்ஸ் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளின் குறிப்பிட்ட சில பயணிகள் விமான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கடந்த 14 நாட்களில் இலங்கை உள்ளிட்ட அந்த நாடுகளுடன் தொடர்புடையவர்களுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் வேறு எந்த இடத்திற்கும் பயணிக்க முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**மனவளக்கலை யோகப் பயிற்சிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன**

யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில் முழுமைநல வாழ்விற்கான எளியமுறை குண்டலினி யோகப் பயிற்சிகளாகிய

- நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கு: எளியமுறை உடற்பயிற்சிகள்
- மன அழுத்தம் குறைய: எளியமுறை தியானப் பயிற்சிகள்
- உயிர்ச்சக்தியை அதிகரிப்பதற்கு: காயகல்பப் பயிற்சிகள்

போன்றவற்றை அன்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பிக்க இருக்கின்றன. எனவே அனைவரும் தவறாது கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**காலம்:31.07.2021 (சனிக்கிழமை)**
**நேரம்: மாலை 5.00 மணி தொடக்கம் இரவு 7.00 மணி வரைக்கும்**
**பயிற்சிகளை வழுங்குபவர்: துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் அவர்கள்**

குறிப்பு: பயிற்சியானது கொவிட்-19 சமூக பாதுகாப்பு விதிகளுக்கமைவாக நடைபெறும்.

**தொடர்புகளிற்கு: யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்**
**இல.81, பிறவுண்வீதி, கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**தொ.இல.021 222 2772, 077 736 8745, 071 440 3268, 071 424 6309** (C-2433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவமயப்படுத்தப்பட்ட கல்வித் திட்டங்கள்

# அனைத்து சமூகத்தையும் பாதிக்கும்

## யாழ்.பல்கலை.ஆசிரியர் சங்க தலைவர் தெரிவிப்பு

(குப்பிழான்)

**இராணுவ மயப்படுத்தப்பட்ட கட்டமைப்புக்களில் உள்ள தென் ஆசியநாடுகளில் மக்கள் குரல் கொடுக்க முடியாதவாறு அடிப்படைக் கருத்துச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் அனைத்தும் முடக்கப்படக் கூடிய நிலை காணப்படுகின்றது. அதேபோன்று தான் எங்கள் சமூகமும் இராணுவமயப்படுத்தப்பட்ட கல்வித் திட்டங்களால் பாதிக்கப்படக் கூடிய சூழல் காணப்படுகின்றது என யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் தலைவரும், விரிவுரையாளருமான என். சிவகரன் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினரின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தின் இடை நடுவில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போதைய அரசாங்கமானது கொத்தலவல தேசிய பாதுகாப்புக் கல்வி நிலையத்தினைப் பல்கலைக்கழகமாகத் தரமுயர்த்துவதற்கான சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான தயார்படுத்தலை முன்னெடுத்துள்ளது. இதற்கெதிரான சமூகத்தின் குரல்கள் ஓங்கி ஒலிக்கின்ற நிலையில் பல்கலைக்கழக நியதிச் சட்டங்களை மாற்றி அமைப் பதன் ஊடாக பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை அரச பல்க லைக்கழகத்தின் நிர்வாகக் கட்டமைப்புக்குள் கொண்டு வருவதற்கான ஒரு செயற்பாட்டினை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

எந்தவொரு சட்டக் கட்டமைப்பையும் மாற்ற வேண்டுமாகவிருந்தால் அதற்கான தயார்படுத்தல்கள், கருத்தாடல்கள் என்பன மேற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் அவற்றையெல்லாம் தவிர்த்து அரசாங்கமானது தனது எதேச்சதிகாரமான செயற்பாடாக இந்தச் சட்ட மூலங்களை அறிமுகப்படுத்த முற்படுகின்றது. இராணுவமயப்படுத்தப்பட்ட கல்வித் திட்டங்கள் எங்கள் சமூகத்திற்குள் ஊடுருவி எங்கள் எதிர்காலச் சந்ததியைப் பாழாக்கக் கூடும் என்ற அச்சுறுத்தல் எமக்குள்ளது. நிச்சயமாக இதற்கு எதிராக அனைத்துச் சமூகங்களும் இணைந்து வீதியில் இறங்கிப்போராட வேண்டும். குரல் கொடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் வலியுறுத்தினார். (4-6-8-18)

## இன்று கொவிட் தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள்

| MOH | கிராம உத்தியோகத்தர் பிரிவு (30 வயதுக்கு மேற்பட்டோர்) | தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| சங்கானை | ஜே/ 168, ஜே/ 169, ஜே/ 170, ஜே/ 171 | தொல்புரம் விக்னேஸ்வரா பாடசாலை<br>யா/ மூளாய் சைவப்பிரகாசா பாடசாலை |
| சாவகச்சேரி | ஜே/ 288- ஜே/ 299<br>ஜே/300, ஜே/319,<br>ஜே/320-ஜே/321, ஜே/337-ஜே/347<br>ஜே/322-ஜே/336, | ஆரம்ப சுகாதார மருத்துவ மையம் - கைதடி<br>சாவகச்சேரி நகர சபை பொன் விழா மண்டபம்<br>வரணி பிரதேச வைத்தியசாலை<br>கொடிகாமம் பிரதேச வைத்தியசாலை |
| யாழ்ப்பாணம் | ஜே/68<br>ஜே/80-ஜே/85<br>ஜே/106, ஜே/107 | சென். ஜோன்ஸ் கல்லூரி<br>யா/ வைத்தீஸ்வரா கல்லூரி<br>நல்லூர் துர்க்கா மணிமண்டபம் |
| காரைநகர் | அனைத்து முன்களப் பணியாளர்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - காரைநகர் |
| கரவெட்டி | அனைத்து முன்களப் பணியாளர்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - கரவெட்டி |
| ஊர்காவற்றுறை | அனைத்து முன்களப் பணியாளர்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - ஊர்காவற்றுறை |
| கோப்பாய் | ஜே/266<br>ஜே/269<br><br>ஜே/276, ஜே/278<br>ஜே/283 ஜே/284 | உரும்பிராய் இந்துக் கல்லூரி<br>நீர்வேலி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை<br>புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி<br>அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை |
| மருதங்கேணி | ஜே/422, ஜே/425<br>ஜே/430 | நாகர்கோவில் மகா வித்தியாலயம்<br>உடுத்துறை மருத்துவ மையம் |
| நல்லூர் | ஜே/90, ஜே/94, ஜே/96<br>ஜே/99<br>ஜே/112, ஜே/114<br>ஜே/117, ஜே/118 | நாவலடி பொது சுகாதார நிலையம்<br>மஞ்சவனப்பதி கோவில்<br>முத்துத்தம்பி மகா வித்தியாலயம்<br>சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை - நல்லூர் |
| பருத்தித்துறை | ஜே/411, ஜே/414, அனைத்து முன்களப் பணியாளர்கள் | வட இந்து மகளிர் கல்லூரி |
| சண்டிலிப்பாய் | | பிரதேச வைத்தியசாலை - மானிப்பாய்<br>சுதுமலை சின்மய பாரதி<br>மானிப்பாய் மெமோறியல் |
| தெல்லிப்பழை | ஜே/277<br>ஜே/228<br>ஜே/229 | யூனியன் கல்லூரி (காலை 8 மணி முதல்)<br>யூனியன் கல்லூரி (முற்பகல் 10 மணி முதல்)<br>யூனியன் கல்லூரி (மதியம் 12 மணி முதல்) |
| உடுவில் | ஜே/185, ஜே/187<br>ஜே/188, ஜே/191<br>ஜே/193<br>ஜே/196<br>ஜே/201, ஜே/202<br>ஜே/207 | யா/ உடுவில் மகளிர் கல்லூரி<br>யா/ இணுவில் இந்துக் கல்லூரி<br>யா/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை<br>உடுவில்சுகாதார வைத்திய அதிகாரிபணிமனை<br>ஏழாலை முத்தமிழ் மன்றம்<br>புன்னாலைக்கட்டுவன் சித்திவிநாயகர் பாடசாலை |
| வேலணை | ஜே/28, ஜே/30, ஜே/32, ஜே/33 | [illegible] |

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தாதிய உதவியாளர் மற்றும் மின்னியலாளர் கற்கை நெறிகளுக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத்திகதியன்று 16-35 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப் பதாரிகள் தமது முழுப் பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித்தகைமைகள், தொலை பேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44, சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப் பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுத் திகதி 2021. 08.15 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071455 3696 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் அறிவித்தார். (4-8)

## மஹோற்சவம்

(குப்பிழான்)

ஊரெழு கிளானைப் பதி பர்வதவர்த்தனி மனோன் மணி அம்பாள் ஆலய பிலவ வருட மஹோற்சவப் பெருவிழா நாளை சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெருவிழாவில் அடுத்தமாதம் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும், மறு நாள் 11 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தோற்சவமும், அன்றைய தினம் மாலை 5 மணியளவில் கொடியிறக்க உற்சவமும் நடைபெறும். (4-6-8-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடளாவிய ரீதியில் மீண்டும் பயணக் கட்டுப்பாடு?

## பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தகவல்

(கொழும்பு)

**நாட்டில் தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களின் பெரும் எண்ணிக்கையானோர் ஒட்சிசன் தேவையுடையோராகக் காணப்படுவதுடன், சிக்கல் நிலைமை அதிகமாக கொண்டவர்களும் காணப்படுவதாக பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.**



எனவே சுகாதார விதி முறைகளை முறையாக பின்பற்றாவிட்டால் போக்கு வரத்து கட்டுப்பாடுகளை முன்னரைப் போன்று கடுமையாக்க வேண்டியேற்படும் என்றும் எச்சரித்தார்.

இது தொடர்பில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த சில வாரங்களை விட தற்போது இனங்காணப்படும் தொற்றாளர்களில் பெரும் எண்ணிக்கையானோருக்கு அறிகுறிகள் தென்படுவதோடு, அவர்கள் சிக்கல் நிலைமை அதிகமுடையவர்களாகவும் உள்ளனர்.

குறிப்பாக பெருமளவானோர் ஒட்சிசன் தேவையுடையோராகவுள்ளனர்.

தொற்றாளர்களை அனுமதித்து சிகிச்சையளிப்பதற்காக தயார்படுத்தப்பட்டிருந்த பெரும்பாலான சிகிச்சை நிலையங்கள் தற்போது நிரம்பியுள்ளன.

எனவே, சிகிச்சை நிலையங்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாட்டை முழுமையாக திறக்க முடியுமா? என்பதை நாட்டு மக்களே தீர்மானிக்க வேண்டும்.

பொதுமக்கள் பொறுப்புடன் செயற்படுகின்றனர் என்று நாம் அவதானித்தால் சுகாதார பாதுகாப்பு வழி முறைகளுடன் போக்குவரத்து கட்டுப்பாடுகளை தளர்த்த முடியும்.

மாறாக அவ்வாறில்லை என்றால் போக்குவரத்து கட்டுப்பாடுகளை தளர்த்துவதில் தாமதம் ஏற்படும் அல்லது கட்டுப்பாடுகளை மேலும் கடுமையாக்க வேண்டியேற்படும் என அவர் தெரிவித்தார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1981 இந்து நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா:28செவ் 12 சூரி2 ல்
தகைமை/தொழில்: ஆசாரிவேலை (சொந்தம்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்தபெண்
தொ.இ: B/2022

பிறப்பு:1979 இந்து நட்சத்திரம்: மூலம்
கி.பா: 30 ½செவ் 10 சூரி11 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:B.A. லண்டன் கடை (PR இல்லை)
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும் PR உள்ள பெண்
தொ.இ: B/2044

பிறப்பு:1978 இந்து நட்சத்திரம்:ஆயிலியம்
கி.பா:24செவ் 10 சூரி7 இல்
உயரம்:6'
தகைமை/தொழில்: சொந்தகடை
எதிர்பார்ப்பு:சாதாரணபெண்
தொ.இ: B/2048

பிறப்பு:1968இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா: 23 ½செவ் 10சூரி11இல்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்:டுபாய் (15 வருடம்)
எதிர்பார்ப்பு:அழகானபெண்
தொ.இ: B/2053

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1990 இந்து நட்சத்திரம்: பூசம்
கி.பா: 38செவ் 4சூரி5 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:. Diploma in Law
எதிர்பார்ப்பு:வெளிநாடு விரும்பத்தக்கது.
தொ.இ:G/6071

பிறப்பு:1991 இந்து நட்சத்திரம்:ரேவதி
கி.பா:15செவ் 7 சூரி4 இல்
உயரம்:165cm
தகைமை/தொழில்:தனியார் வங்கி ஊழியர்
எதிர்பார்ப்பு:வெளிநாடு (அவுஸ்திரேலியா, லண்டன்) மட்டும்
தொ.இ:G/6079

பிறப்பு:1979 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா:-செவ்10 சூரி11 இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்: BAபட்டதாரி, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு:அரச, தனியார் தொழில்
தொ.இ:G/6093

பிறப்பு: 1973இந்து நட்சத்திரம்:பூரம்
கி.பா:29 செவ் 2 சூரி3 இல்
உயரம்:4'12"
தகைமை/தொழில்: தனியார் தாதி உத்தியோகம்
எதிர்பார்ப்பு:சாதாரண மணமகன்
தொ.இ:G/6099

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


# பிறந்து இருநாட்களான சிசு கொரோனாவால் உயிரிழப்பு

(கொழும்பு)

பிறந்து இரண்டு நாட்களேயான பச்சிளம் சிசு கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளது.

களுத்துறை பொது வைத்திய சாலையில் பிறந்த இந்த குழந்தை நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-5)

# 15 மில்லியன் பேருக்கு வருட இறுதிக்குள் தடுப்பூசி

## லலித் வீரதுங்க

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளாதவர்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படுவதாக கொவிட் தடுப்பூசி தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் அல்லது ஒரு தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக்கொண்டவர்கள் என லலித் வீரதுங்க குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தைத் திறந்து வைத்து நடத்திய முதலாவது ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் முதலாம் கட்டத்தின் கீழ், 30 வயதுக்கு மேற்பட்டோரில் 11.5 மில்லியன் பேருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்படும் என கொவிட் தடுப்பூசி தொடர்பிலான ஜனாதிபதி செயலணியின் தலைவர் லலித் வீரதுங்க தெரிவித்தார்.(நி-5)

# சுய தனிமைப்படுத்தலில் விமல்

(கொழும்பு)

கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச தன்னைத் தானே சுய தனிமைப்படுத்திக் கொண்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

தனது பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சிலர் கொரோனா தொற்றுக்குள்ளானதை அடுத்தே, தான் தனிமைப்படுத்திக் கொண்டதாக பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார்.

இதனை அடுத்து கைத்தொழில் அமைச்சில் கிருமி நீக்கம் செய்யப்பட்டு 14 நாட்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் அமைச்சின் வழக்கமான செயற்பாடுகள் இடம்பெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குடிநீருக்கு தட்டுப்பாடு! நெருக்கடியில் மக்கள்

(கண்டாவளை)

**கிளிநொச்சி மாவட்டத்தின் அக்கராயன்குளம் பாரதிபுரம் பொன்னகர் ஆகிய பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருவதனால் தாங்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.**



கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாரதிபுரம், மலையாளபுரம், பொன்னகர் ஆகிய பகுதிகளில் குடிநீருக்கான தட்டுப்பாடு நிலவி வருகிறது. குறிப்பாக இந்த பிரதேசங்களிலேயே காணப்பட்ட கிணறுகளில் நீர் வற்றிய நிலையில் காணப்படுவதனால் தற்போதைய வறட்சி காரணமாக குடிநீருக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் இந்த பிரதேசத்தில் மக்கள் தமக்கான குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும்சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவித்துள்ளனர். இதேபோன்று கிளிநொச்சி அக்கராயன்குளம் பகுதிகளில் குடிநீர் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கெங்காதரன் குடியிருப்பு, இன்மாஸ் நகர், ஆனைவிழுந்தான் போன்ற பகுதிகளிலும் இவ்வாறு குடிநீர்த்தட்டுப்பாடு நிலவி வருவதாகவும் இங்குள்ள தாங்கள் குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாகவும் பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர். எனவே தமக்கான குடிநீர்ப்பிரச் சினைக்கு தீர்வை பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர். (4-6-8-315)

# மன்னாரில் கொவிட்டால் பலியானவர் இறந்த பின்னர் தொற்றாளராக அடையாளம்

## மன்.சுகாதாரப் பணிப்பாளர்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் அடையாளம் காணப்பட்ட 5 கொரோனா தொற்றாளர்களில் ஒருவர் இறந்த பின்னர் கொரோனா தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நேற்று முன்தினம் மாலை அடையாளம் காணப்பட்ட 5 கொரோனா தொற்றாளர்களில் ஒருவர் இறந்த பின்னர் கொரோனாத் தொற்றாளராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அவர் மன்னார் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த 37 வயதுடைய இளம் குடும்பஸ்தராக அடையாளம் காணப்பட்டுள்ளார். அவருக்கு ஏற்கனவே இருதய நோய் காணப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இதுவரை 9 கொரோனா மரணம் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இதுவரை 24 ஆயிரத்து 900 பி.சி.ஆர்.பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மக்கள் தடுப்பூசிகளை பெற்றுக் கொண்டாலும் நமது சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்பட வேண்டும்.

இக்காலங்களில் ஆலயங்களில் திருவிழாக்கள் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் இடம் பெறுவதால் குறித்த திருவிழாக்களில் கலந்து கொள்ளும் பக்தர்கள் தமது சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடித்து, திருவிழாவில் பங்கேற்றவுடன் திருவிழா முடிவடைந்த பின் தேவையற்று நடமாடுவதை தவிர்த்தும் கூட்டமாக இருப்பதை தவிர்த்து உடனடியாக வீடுகளுக்கு செல்லுமாறும் கேட்டுக்கொள்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-8-285)



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் உத்தியோகத்தர்களுக்கான நான்கு நாட்களைக் கொண்ட யோகா பயிற்சிப் பட்டறை பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்று வருகின்றது. (படம்:-தவசீலன்)

# வனவள திணைக்களத்திடம் உள்ள காணிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## விவசாய அமைப்புக்கள் கோரிக்கை

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாயக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என விவசாய அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த கால யுத்தம் மற்றும் இடப்பெயர்வுகள் காரணமாக கைவிடப்பட்ட விவசாய நிலங்கள் தற்போதுயிர்ச்செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் காடுகள் வளர்ந்து காணப்படுகின்றன.


இவ்வாறான பொதுமக்களுக்கு சொந்தமான பெருமளவான காணிகள் வனவளத் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் தங்களுடைய விவசாய நிலங்களில் பயிர்ச் செய்கை மேற்கொள்ள முடியாத நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தில் வனவளத்திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களங்களினால் கையகப்படுத்தப்பட்டுள்ள விவசாயக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என விவசாய அமைப்புக்கள் கோரியுள்ளன. (4-6-8-315)

# கள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல்

(நெளுக்குளம்)

வவுனியா பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் கள உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இடம்பெற்றது. வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமாகிய கு.திலீபன் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கிராமப்புறங்களில் இடம்பெறுகின்ற வன்முறைகள், போதைப் பொருள் பாவனை மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல், சமுர்த்தி கொடுப்பனவு போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இக்கலந்துரையாடலில் வவுனியா பிரதேச செயலாளர் நா.கலதாசன், கிராம சேவை உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (4-6-8-299)



முல்லைத்தீவு மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவு மற்றும் சர்வோதய அரச சார்பற்ற நிறுவனமும் இணைந்து மாவட்ட மாதத்தலைவர்களுக்கான அனர்த்த அபாய தடுப்பு கருத்தரங்கு நேற்று முன்தினம் மாவட்ட செயலக பண்டாரவன்னியன் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. (படம் :- தவசீலன்)

# வறுமைக் கோட்டிற்குட்பட்ட குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் வீடு கையளிப்பு



(கண்டாவளை)

கிளிநொச்சி பூநகரி பிரதேசத்திற்குட்பட்ட முக்கொம்பன் பகுதியில் வீட்டுத் தேவையுடைய வறுமைக் கோட்டின் கீழ் வாழும் இரு குடும்பங்களுக்கு இராணுவத்தினரால் புதிய வீடுகள் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தினரின் வீடுகளை நிர்மாணித்துக் கொடுக்கும் சமூக திட்டத்தின்படி கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஹரேந்திர ரணசிங்கவின் வேண்டுகோளுக்கு அமைவாக இத்தாலியில் வசிக்கும் இலங்கையர் ஒருவரிடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதியின் மூலம் கிளிநொச்சி முக்கொம்பன் பகுதியில் வசிக்கும் வறுமைக் கோட்டின்கீழ் வாழும் குடும்பத்திற்கான புதிய வீடு 20 ஆவது இலங்கை இலேசாயுத காலாட் படையினரால் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டது.

இதேவேளை கிளிநொச்சி பாதுகாப்புப் படைத் தலைமையகத்திற்கு கிடைக்கப் பெற்ற நிதி உதவியுடன் விஜயபாகு காலாட் படை படைப்பிரிவினரால் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் பகுதியை சேர்ந்த வறிய குடும்பத்திற்கான புதிய வீடொன்றும் நிர்மாணிக்கப்பட்டு [illegible] (4-6-8-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

30.07.2021
ஆடி 14, வெள்ளிக்கிழமை
சஷ்டி முற்பகல் 7.01 மணிவரை
ரேவதி பிற்பகல் 5.30 மணிவரை
சுபநேரம் 6.03-7.33 மணிவரை
இராகுகாலம் 10.33-12.03 மணிவரை
சந்திராஷ்டமம்: பூரம், உத்தரம்.

வளவன்

**மேஷம்** – வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப விரயங்கள் மேலோங்கும் நாள், சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கும்.

**ரிஷபம்** – பொது வாழ்வில் மகிழ்ச்சியும் மரியாதையும் உயரும், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மிதுனம்** – மன நிறைவு கூடும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் உங்கள் தகுதியை உயர்த்தும், தொழில் வளர்ச்சி கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**கடகம்** – விரதம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தந்தை வழி உறவில் அனுகூலமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**சிம்மம்** – சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் ரீதியாக சில குழப்பங்கள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, கௌரவக் குறைவான சில சம்பவங்கள் இடம்பெறாலம்.

**கன்னி** – நட்பு வட்டம் விரிவடையும் நாள், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கௌரவமான நாள்.

**துலாம்** – கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், ஆரோக்கியம் சீராகும்.

**விருச்சிகம்** – அனுகூலம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**தனுசு** – மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, மாற்றுத்தவர்கள் மூலம் சில நன்மைகள் இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** – உற்சாகத்தோடு செயற்படும் நாள், உள்ளம் மகிழும் சம்பவங்கள் இடம்பெறலாம், போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், போசன சுகமுண்டு.

**கும்பம்** – குடும்பத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும் நாள், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், முயற்சிகளில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**மீனம்** – மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், ஆழ்ந்த சிந்தனையுண்டு, பெரிய மனிதர்களின் சந்திப்புண்டு.

இறைவனின் அழகில் உன்னை நீ இழந்துவிட தியானம் செய்

# சட்டவிரோத செயற்பாடுகளால் அழிவடையும் குருவிக்காடு

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி பிரதேச சபை மற்றும் கரவெட்டி பிரதேசசபை ஆகியவற்றின் ஆளுகைக்குட்பட்டு சுமார் 870 ஹெக்டேயர் நிலப் பரபபைக் கொண்டுள்ள இயற்கையான பறவைகள் சரணாலயமான குருவிக்காடு சட்டவிரோதச் செயற்பாடுகளால் அழிவடைந்து வருகிறது.**


சரசாலை-குருவிக்காட்டு சூழலில் சட்டவிரோத மதுபான உற்பத்தி, சட்டவிரோத மணல் அகழ்வு, வெளிநாட்டு பறவைகளை வேட்டையாடல், கலாசார சீரழிவு, மரக் கடத்தல், மருத்துவக் கழிவுகளைக் கொட்டுதல் உள்ளிட்ட பல சட்டவிரோதச் செயற்பாடுகள் நாளாந்தம் இடம்பெற்ற வண்ணமே உள்ளன.

அதில் ஒருசில சட்டவிரோதச் செயற்பாடுகளை பொலிஸார் இனங்கண்டு நடவடிக்கை எடுத்தாலும் பல சட்டவிரோதச் செயற்பாடுகள் பொலிஸாரின் கண்களில் படாமல் இடம்பெற்று வருகின்றன என சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டுகிறார்கள்.

அண்மையில் நாட்டில் அமுல்படுத்தப்பட்ட பயணத்தடை வேளையில் குருவிக்காட்டு பகுதியில் இரண்டு பாரிய கசிப்பு உற்பத்தி நிலையங்கள் சாவகச்சேரி பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு பெருமளவான கசிப்பு மற்றும் அதன் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் பொருட்கள் ஆகியனவும் கைப்பற்றப்பட்டன. பொலிஸாரின் கண்களில் படாமல் இன்னும் பல கசிப்பு குகைகள் குருவிக்காட்டில் இருக்கக் கூடும்.

அதனைவிட மணல் கடத்தல், அரிய வகை வெளிநாட்டு பறவைகளை வேட்டையாடி இறைச்சியாக்குதல் உள்ளிட்ட பல குற்றச்செயல்கள் நாளாந்தம் குருவிக்காட்டில் இடம்பெற்ற வண்ணமே உள்ளன. எல்லாவற்றுக்கும் மேலாக சுகாதார சீர்கேட்டினை ஏற்படுத்தக்கூடிய வகையில் மருத்துவக் கழிவுகள் கூட இரவு வேளைகளில் இனந்தெரியாதோரால் குருவிக்காட்டில் கொட்டப்படுகிறது. இவை அனைத்துமே குருவிக்காட்டின் அழிவுக்கு வித்திடும் செயற்பாடாகவே உற்று நோக்கப்படுகிறது.

இயற்கை எமக்கு தந்த கொடை இந்த வனம். அதனை தவறான வழியில் பயன்படுத்துவதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. குருவிக்காட்டினை பாதுகாத்து அடுத்த சந்ததியிடம் பாதுகாப்பாக ஒப்படைக்க வேண்டிய பாரிய பொறுப்பு சகலருக்குமுண்டு. எதிர்காலத்தில் இவ்வாறானதொரு காட்டினை உருவாக்குவதென்பது நினைத்துக்கூட பார்க்க முடியாததொன்று. எனவே இருப்பதனை பேணி அதனை மெருகேற்ற வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என சமூக ஆர்வலர்கள் தெரிவித்தனர். (4-6-8-30)



நடமாடும் தடுப்பூசி ஏற்றும் பணிகள் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரியும் 88 ஆவது வயதில் நேற்று சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டார்.

(படம்:-சப்த சங்கரி)

# புதிய தபால் கட்டடத்தை விரைவில் திறந்து வைக்கவும்

## பொதுமக்கள் கோரிக்கை

(அராலி)

சங்கானையில் தபால் அலுவலகம் வாடகை வீட்டில் இயங்கி வருவதால் நிலையான கட்டடத்திற்கென மக்களின் பங்களிப்பில் காணி வாங்கப்பட்டு புதிதாக கட்டடம்கட்டப்பட்டு இருந்த போதும் இரு வருடங்கள் கடந்த நிலையிலும் குறித்த கட்டடம் திறக்கப்படவில்லை. எனவே அக்கட்டடத்தை விரைவில் திறந்து வைக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2006 ஆம் ஆண்டு இந்த கட்டடத்திற்கு மக்களால் காணி அன்பளிப்பு செய்யப்பட்டு 2018 ஆம் ஆண்டு மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளரால் அடிக்கல் நாட்டப்பட்டு ஒரு வருடத்தில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது. மேலும் சிறிய வேலைத் திட்டங்கள் உள்ள நிலையில் அவற்றையும் விரைவில் பூரணப்படுத்தி குறித்த கட்டடத்தை திறந்து வைக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-8-104)

# சுகாதார நடைமுறைகள் எவையும் இல்லை

## தடுப்பூசி பெற திரளும் மக்களால் அச்ச நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கு தடுப்பூசி ஏற்றுவதற்கு தடுப்பூசி செலுத்தும் மையங்களில் பல நூற்றுக்கணக்கில் மக்கள் ஒன்றாகத் திரள்வது தொடர்பில் சமூக ஆர்வலர்கள் விசனம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று முதல் 30 வயதுக்கு மேற்பட்ட யாழ்.மாவட்டத்தினைச் சேர்ந்த அனைவருக்கும் தடுப்பூசிபெற்றுக்கொள்ள முடியும் என்று சுகாதாரத் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில் நேற்றுக் காலை தொடக்கம் சிகிச்சை மையங்களில் நீண்ட வரிசையில் மக்கள் திரண்டனர். சுகாதார நடைமுறைகள் எவையும் பேணப்படாமல் சமூக இடைவெளி எதுவும் இல்லாமல் காணப்படுவதாகவும்சமூக ஆர்வலர்களால் குற்றம்சாட்டப்பட்டது. (4-8-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# குழந்தை திருமணங்களை தடுக்க அதிக கவனம் தேவை



## தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின்

(சென்னை)

**குழந்தைத் திருமணங் கள் அதிகளவு நடைபெறும் தமிழகத்தின் ஏழு மாவட்டங்களில் தடுப்பு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தினார்.**

சமூகநலன் மற்றும் சமூக சீர்திருத்தத்துறை செயற் பாடுகள் குறித்து தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தி னம்ஆலோசனைநடத்தினார்.

இந்தக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறுகையில், சமூக நலத்துறையின் சார்பில் செயற்படுத்தப்படும் திருமண நிதியுதவி திட்ட ங்களில் தகுதி வாய்ந்த பயனாளிகள் எவரும் விடுபடாமல் உரிய காலத்தில் பயன்களை அளிக்க வேண்டும். குழந்தைத் திருமணம், பெண்சிசுக்கொலை போன்ற அவலங்களைக் களைய உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். அதற்கான சட்டங்களைகடுமையாகநடைமுறைப்படுத்த வேண்டும்.

குழந்தைத் திருமணங்கள் அதிகமாக நடைபெறும் விழுப்புரம், திண்டுக்கல், ஈரோடு, கரூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, தேனி மாவட்டங்களில் அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என அவர் தெரிவித்தார். (8-5)

## 25 மில்லியன் டொலர் நிதியை இந்தியாவுக்கு வழங்கிய அமெரிக்கா

(வோஷிங்டன்)

இந்தியாவின் கொவிட்-19 தடுப்பூசி செயற்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக 25 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கவுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

அமெரிக்கா இராஜாங்க செயலாளர் அன்டனி பிளின்டன் இதனைத் தெரிவித்தார்.

கொவிட்-19 பரவலை கட்டுப்படுத்துவதற்காக இந்தியாவிற்கு இதுவரை 200 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியாக வழங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த நிதியுதவியானது தடுப்பூசி விநியோகத்தை வலுப்படுத்தல், மக்களுக்கு ஊட்டச்சத்து அளித்தல், சுகாதார சேவையாளர்களுக்கு பயிற்சி வழங்கல் போன்ற செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## தடுப்பூசி போடுகிறவருக்கு 100 டொலர் பரிசு

### நியூயோர்க் மேயர் அதிரடி அறிவிப்பு

(அல்பானி)

நியூயோர்க்கில் தடுப்பூசி போட்டுக் கொள்பவர்களுக்கு 100 டொலர் பரிசு கிடைக்கும் என்று நியூயோர்க் மேயர் அறிவித்துள்ளார்.

அமெரிக்காவில் மீண்டும் டெல்டா வைரஸ் பரவல் அதிகரித்து வரும் சூழலில் பொதுமக்கள் அனைவரும் மீண்டும் முகக்கவசம் அணியும்படி ஜனாதிபதி ஜோ பிடன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தடுப்பூசிகள் இயக்கத்தை வேகப்படுத்தவும் ஜோ பிடன் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் ஒருபகுதியாக நியூயோர்க் நகரவாசிகளுக்குத் தடுப்பூசி போட்டால் 100 டொலர் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை 66 சதவீதம் பேர் இரண்டு தடுப்பூசிகளும் 71 சதவீதம் பேர் ஒரு தடுப்பூசியும் போட்டுக் கொண்டிருப்பதாக நியூயோர்க் நகர மேயர் டெ பிளாசியோ தெரிவித்தார். (8-5)

## 132 நாடுகளில் உருமாறிய டெல்டா

(ஜெனீவா)

டெல்டாகொரோனாவைரஸ் உலகின் 132 நாடு களில் பரவியுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் பரவலால் மட்டும் 38 இலட்சம் புதிய கொரோனா தொற்றாளர்கள் பதிவாகியுள்ளனர்.

முன்னைய வாரத்துடன் ஒப்பிடும்போது 8 சதவீதம் அதிகரித்துள்ளதாக ஐ.நா சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் தற்போதைய தரவின் படி, அமெரிக்கா மற்றும் மேற்கு பசுபிக் நாடுகளில் கணிசமான அதிகரிப்பை காட்டியுள்ளது.

கொரோனாவின் அல்பா வைரஸ் 182 நாடுகளிலும், பீட்டா வைரஸ் 131 நாடுகளிலும், காமா வைரஸ் 81 நாடுகளிலும் டெல்டா வைரஸ் 132 நாடுகளிலும் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## போர் விமானங்களை நிறுத்தும் இ

(டில்லி)

சீனாவுடனான கிழக்கு எல்லையில் ரபேல் போர் விமானங்களை இந்தியா நிறுத்தியுள்ளது.

எல்லைப் பகுதியில் அவ் வவ்போது பதற்ற நிலைமை நீடித்து வருகின்றது.

அதே நேரம் படைவிலக்கல் நடவ டிக்கையும் முன்னெடுக்கப் பட்டு வருகிறது.

## சக்திவாய்ந்த நி தொடர்ந்து அ சுனாமி எச்

(வோஷிங்டன்)

அலெஸ்கா கடற்பகுதியில் 8.2 ரிக்டர் அளவிலான சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் மையத்தின் ஆரம்ப தகவல்கள் தெரிவித்துள்ளன. இதன் காரணமாக சுனாமி எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளன.

மிகவும் வலுவான இந்த நிலநடுக்கம் அலெஸ்காவின் பெர்ரிவில்லுக்கு தென்கிழக்கில் 56 மைல் தொலைவில் உள்ளூர் நேரப்படி நேற்று முன்தினம் இரவு 10:15 மணியளவில் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் மக்களின் தொலைபேசிகளுக்கு அனுப்பப்பட்ட அவசர எச்சரிக்கையில் தேசிய

## அணு ஆயுத திறன்களை இரகசியமாக மேம்படுத்தும் சீனா- அமெரிக்க விஞ்ஞானிகள் தகவல்

(வோஷிங்டன்)

சீனா அணுசக்தி ஏவுகணைகளை சேமித்து வைக்கும் திறனை விரிவுபடுத்தி வருவதாக அமெரிக்க விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

ஸின்ஜியாங் பிராந்தியத்தில் இருந்து பெறப்பட்ட செய்மதிப் புகைப்படங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்க விஞ்ஞானிகள் சம்மேளனம் இதனை அறிவித்துள்ளது.

சீனாவின் அணுசக்தி நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்க பாதுகாப்பு அதிகாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் மேற்கு சீனாவில், அணுவாயுதங்களை எறிவதற்கு ஏதுவாக பதுக்கி வைக்கும் இரண்டாவது நிலக்கீழ் பகுதி அமைக்கப்பட்டு வருவதாக தகவல் கிடைக்கப் பெற்றுள்ளது.

கன்சு மாகாணத்தின் யுமென் பாலைவனப் பகுதியில் இவ்வாறு 120 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக வோஷிங்டன் போஸ்ட் கடந்த மாதத்தில் செய்தி அறிக்கையிட்டிருந்தது.

அமெரிக்கா மற்றும் ரஷ்யாவுக்கு இடையில் ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பிலான பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இந்த செய்தி வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## உலகளவில் ெ

**உயிரிழப்பு :-4 2**

**தொற்று :-196 9**

**(நேற்று மாலை நி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு



# உலகப் பொருளாதாரத்தை மீட்பதற்கு புதிய சவால்கள் உள்ளன

## சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டு

(ஜெனிவா)

**கொவிட்-19 வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள உலக பொருளாதாரத்தை மீட்பதற்கு புதிய சவால்கள் உள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.**

உலகளாவிய பின்னணி குறித்து தமது அண்மைய ஆய்வு முடிவுகளை வெளியிட்டுள்ள சர்வதேச நாணய நிதியம், பொருளாதார மீட்சியை இரண்டு பிரிவுகளாகவும் வகைப்படுத்தியுள்ளது.

தடுப்பூசி செலுத்தும் பணிகளை முன்னெடுத்து நாட்டை மீண்டும் வழமைக்குக் கொண்டு வருவதன் ஊடாக பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் அபிவிருத்தியடைந்த நாடுகள் முதல்நிலையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்று மற்றும் மரணங்கள் தொடர்ந்தும் அதிகரித்துள்ள அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் அதன் இரண்டாம் நிலையில், வகைப்படுத்தப்பட்டுள்ளன.

தங்களுடைய நாட்டில் கொரோனா வைரஸ் கட்டுப்படுத்தப்பட்டிருப்பினும், உலக நாடுகளில் வைரஸ் பரவல் இருக்கும் வரையில், அபிவிருத்தியடைந்த நாடுகளை மீட்பதில் பாரிய சிக்கலை தோற்றுவித்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த வருடத்தின் உலக பொருளாதாரமானது 6 சதவீதமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## ...ளை சீன எல்லையில் ...ம் இந்தியா

இதற்கிடையில் எதிர்வரும் சனிக்கிழமை இரு நாட்டு உயர் இராணுவ அதிகாரிகள் அளவிலான பேச்சுவார்த்தை நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே இந்தியா ரபேல் போர் விமானங்களை கிழக்கு எல்லையில் நிறுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

## ...நிலநடுக்கத்தை ...அலாஸ்காவில் ...எச்சரிக்கை

வானிலை நிலையம் பின்வருமாறு தெரிவித்துள்ளது.

தேசிய வானிலை சேவை ஒரு சுனாமி எச்சரிக்கையை வெளியிட்டுள்ளது. தொடர்ச்சியான சக்தி வாய்ந்த அலைகள் மற்றும் வலுவான நீரோட்டங்கள் உங்களுக்கு அருகிலுள்ள கடற்கரைகளைப் பாதிக்கலாம்.

நீங்கள் ஆபத்தில் இருக்கிறீர்கள். கடற்கரையை அண்மித்த பகுதிகளிலிருந்து விலகி உயர்வான இடங்களை நோக்கிச் செல்லுங்கள். மறு அறிவித்தல் வரை கடற்கரைகளிலிருந்து விலகி பாதுகாப்பான இடங்களில் இருக்குமாறு அறிவித்துள்ளது. (8-5)

## கொரோனா

207 430

923 206

...நிலவரம்)

# வியாழன் துணைக்கோளில் 'நீராவி'

## நாசா கண்டுபிடிப்பு



(வோஷிங்டன்)

வியாழனின் துணைக்கோளான கேனிமீட் சந்திரனில் நீர் ஆவியாதலை ஹப்பிள் தொலைநோக்கி மூலம் கண்டறிந்து நாசா விஞ்ஞானிகள் உறுதி செய்தனர்.

பூமியில் இருக்கும் பெருங்கடல்களின் நீரை விட அதிகமான நீர் கேனிமீட் துணைக்கோளில் இருப்பதை விஞ்ஞானிகள் கண்டுபிடித்திருக்கின்றனர்.

மேற்பரப்பில் திடமான பனிக்கட்டிகளாக இருக்கும் நீர், சுமார் 160 கிலோ மீற்றர் ஆழத்தில் திரவ நிலையில் இருப்பதாக கூறப்படுகிறது.

பெரும்பான்மையான பகுதிகள் பனிக்கட்டிகளாக இருப்பதால், ஆவியாதல் நடைபெறுவதற்கு வாய்ப்பில்லை என விஞ்ஞானிகள் கருதிய நிலையில், தற்போது கேனிமீட் துணைக்கோளில் உள்ள நீர் ஆவியாவதை உறுதி செய்துள்ளனர்.

கேனிமீட்டில் நீராவி இருக்கும் ஆய்வில் பங்கேற்ற ஆய்வாளர்களில் ஒருவரான லோரென்ட்ஸ் ரோத் பேசும் போது, இப்போது கண்டுபிடிக்கப்பட்ட நீராவியானது சூடான பகுதிகளில் இருந்து பனிக்கட்டிகள் உருகும் போது ஏற்படும் ஆவி எனத் தெரிவித்தார்.

ஒரு நாளில் பல்வேறு வெப்பநிலைகள் கேனிமீட் துணைக்கோளில் பதிவாவதாக தெரிவித்த அவர், வேறுபட்ட வெப்பநிலைகள் இருப்பது இதன்மூலம் உறுதி செய்ய முடிந்ததாக குறிப்பிட்டுள்ளார். (8-5)

# நைஜீரியா- தென்னாபிரிக்க நாடுகளுக்கு ஒரு கோடி தடுப்பூசிகளை அனுப்பும் அமெரிக்கா

(வோஷிங்டன்)

நைஜீரியா, தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு சுமார் ஒரு கோடி தடுப்பூசிகள் அனுப்பி வைக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடன் தெரிவித்தார்.

கொரோனா வைரசுக்கு எதிரான போரில் உலக நாடுகளுக்கு உதவும் வகையில் தங்கள் வசம் உள்ள 8 கோடி கொரோனா தடுப்பூசிகளை உலக நாடுகளுக்கு பகிர்ந்தளிக்க உள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோபிடன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள ஆபிரிக்க நாடுகளான நைஜீரியா மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு சுமார் ஒரு கோடி தடுப்பூசிகளை விரைவில் வழங்க இருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது குறித்து வெள்ளை மாளிகை வெளியிட்டுள்ள அறிவிப்பின்படி, நைஜீரியாவிற்கு 40 இலட்சம் மொடர்னா தடுப்பூசிகளும், தென்னாபிரிக்காவிற்கு 56 இலட்சம் தடுப்பூசிகளும் அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆபிரிக்க நாடுகளுக்கு அமெரிக்காவில் இருந்து அனுப்பப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கை 1.64 கோடியாக உயர்ந்துள்ளது.

மேலும் நைஜீரியா மற்றும் தென்னாபிரிக்காவிற்கு தடுப்பூசிகளை அனுப்பி வைப்பதன் மூலம், ஜனாதிபதி ஜோ பிடன் உறுதியளித்தபடி உலக நாடுகளுக்கு 8 கோடிக்கும் அதிகமான தடுப்பூசிகளை அமெரிக்கா வழங்கி இருப்பது குறிப்பிடத்தக்கது. (8-5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சினோவக்' பெற்று 6 மாதங்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும்

## அரசு இதை கொள்வனவு செய்ய முற்படுவது ஏன்?

(கொழும்பு)

**இலங்கையில் வேகமாகப் பரவுகின்ற டெல்டா மாறுபாட்டைக் கட்டுப்படுத்துவதில் மிகக் குறைந்த செயற்றிறனைக் கொண்ட் 13 மில்லியன் டோஸ் சினோவக் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்கத்தின் நடவடிக்கை குறித்து கேள்வி எழுந்துள்ளது.**

குறிப்பாக ஒரு சினோவக் தடுப்பூசி 15 அமெரிக்க டொலர் என விற்கப்படுகிறது. இது இலங்கை போன்ற நாட்டிற்கு மிகவும் அதிகளவிலான விலையாகும். அதேநேரம் அங்கிருந்து மற்ற தடுப்பூசிகள் குறைந்த விலையில் பெறப்பட்டுள்ளன.

அவசரகால பயன்பாட்டிற்காக சீனாவின் தயாரிப்பான சினோவக் தடுப்பூசிக்கு உலக சுகாதார ஸ்தாபனம் அனுமதியை வழங்கியிருந்தாலும் டெல்டா மாறுபாட்டிற்கு எதிராக இந்த தடுப்பூசி மிகக் குறைந்த செயற்றிறனை வழங்குவதாக மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.

சிலியில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு திருப்திகரமான அளவில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குவதாக காட்டினாலும் அது டெல்டா மாறுபாட்டிற்கு எதிராக நோய் எதிர்ப்பு சக்தியை வழங்கவில்லை.

அங்கு 70% இற்கும் மேற்பட்ட சிலி மக்கள் முழுமையாக தடுப்பூசி செலுத்திக் கொண்டுள்ள போதும் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு டெல்டா மாறுபாட்டிற்கு பதிலளிக்கும் வகையில் பயணக் கட்டுப்பாடுகள் மீண்டும் அமுலுக்கு வந்துள்ளன.

இதேவேளை சினோவக் தடுப்பூசிகளைப் பெற்றவர்களுக்கு 6 மாதங்களில் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து போகக் கூடும் என்றும் பின்னர் அவர்கள் மூன்றாவது தடுப்பூசியை செலுத்த வேண்டிய நிலை ஏற்படும் என்றும் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சினோவக் தடுப்பூசியை வாங்க வேண்டிய அவசியமில்லாத போதும் அரசாங்கம் தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்ய முடிவு செய்துள்ளது.

சுமார் 13 மில்லியன் டோஸ் சினோவக் தடுப்பூசிகளை கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாக உயர்மட்ட தகவல்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# போலி அடையாள அட்டையை காட்டி நிதி மோசடியில் ஈடுபட்டவர் கைது

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்பு செயலாளராக தன்னை அடையாளப்படுத்தி, 12 மில்லியன் ரூபாய் பணத்தை மோசடி செய்தமைக்காக ஒருவர் களனி பகுதியில் கொழும்பு, குற்றத் தடுப்பு அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபர் சுமார் ஆறு மாதங்களுக்கு முன்னர் வெளிநாட்டிலிருந்து வாகனம் இறக்குமதி செய்து பெற்றுத் தருவதாக கூறி பதுளை பகுதியைச் சேர்ந்த ஒருவரிடமிருந்து பண மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

வாகனம் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் தொடர்பில் பாதிக்கப்பட்ட நபர், கொழும்பு குற்றத் தடுப்பு பிரிவுக்கு அளித்த முறைப்பாட்டுக்கு இணங்கவே சந்தேக நபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் போக்குவரத்து இராஜாங்க அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர் என்று கூறி போலி அடையாள அட்டை மற்றும் ஆவணங்களை காண்பித்து ஏமாற்றியுள்ளார்.

இந்நிலையில் அவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. (நி-5)

# சதொசவில் முகக்கவசம் 10 ரூபாய் - பந்துல

(கொழும்பு)

அத்தியாவசியப் பொருட்கள் சிலவற்றை சந்தையில் விற்கப்படும் விலையைவிட குறைந்த விலைக்கு சதொச ஊடாக விநியோகிக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். அதன் பிரகாரம் எஸ்.எல்.எஸ். தரச் சான்றிதழ் உடைய முகக்கவசம் ஒன்றை 10 ரூபாவுக்கு விற்பனை செய்யும் நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

வர்த்தக அமைச்சில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடத்திய விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (நி-5)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2366

**சுரேந்திரர்**

ஒரு கோபம் பத்து நோயை உண்டாக்கும்
ஒரு சிரிப்பு நூறு நோயை குணப்படுத்தும்



**கம்சிகா**

மனைவி : உலகம் பூரா போய் தேடினாலும் என்ன மாதிரி மனைவி கிடைக்கமாட்டா..
கணவன் : எனக்கென்ன பைத்தியமாடி புடிஞ்சிருக்கு... மறுபடியும் உன்னை மாதிரியே தேட...!



**சிவநேசன்**

ஹெல்மேட் போடலனா தலையில அடிப்பட்டு செத்துருவீங்கனு தான் கவர்மென்ட் ஹெல்மட் போட சொல்லுது...
அண்ணே அப்ப டாஸ்மாக்



அது லிவர்... வேற டிபார்ட்மென்ட்...

**மாலினி**

நைட்டு தூக்கமே வரமாட்டிங்கிது...
ஏன்னு தெரியாமல் இருந்தேன்...
அப்புறம் தான் தெரிஞ்சுது...



உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காதாம்...
இது தெரியாமல் நான் வேற பயந்தே போய்ட்டேன்

**சஸ்மிதா**

கடவுளே... எங்க அம்மா ஆசப்படுறதெல்லாம் நிறைவேறனும்



அடி ஆத்தி என்ன இது நம்ம போன் எரியுது



**மகாலிங்கம்**

Tea-ல ஊறின பன்னும்...



Facebook- ல கரக்ட் பண்ணின பொண்ணும் ரொம்ப நேரத்துக்கு நிலைச்சிருக்காது...


நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தவே எதிர்க்கட்சியினர் முயற்சி

(கொழும்பு)

**சர்வதேச முதலீடுகளை தடுக்கவும் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளி அதன் மூலமாக ஆட்சி மாற்றமொன்றை ஏற்படுத்தவுமே எதிர்க்கட்சியினர் முயற்சித்து வருவதாக நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.**



இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, சர்வதேசத்தை எமக்கு எதிராகத் திருப்பி, சர்வதேச முதலீடுகளை தடுக்கவும் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளி அதன் மூலமாக ஆட்சிமாற்றத்தை செய்யவுமே எதிர்க்கட்சியினர், மங்கள சமரவீர, ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் முயற்சிக்கின்றனர்.

ஏற்கனவே மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்கள் போன்ற வெவ்வேறு குற்றச்சாட்டுக்களில் இலங்கையை நெருக்கும் முயற்சிகள் எடுக்கப்படுகின்ற நிலையில் பொருளாதார ரீதியிலும் நாட்டை நெருக்கடிக்குள் தள்ளுவதே இவர்களின் நோக்கமாகும். அதற்கான செய்தியை இவர்கள் சர்வதேசத்திற்கு வழங்கி வருகின்றனர் என கப்ரால் தெரிவித்தார். (நி-5)

# சிறுவர்களின் ஆபாச காணொளிகளை வெளியிடுவோர் கைது

## அஜித் ரோஹண

(கொழும்பு)

சிறுவர்களின் ஆபாச காணொளிகள் மற்றும் புகைப்படங்களை இணையத்தில் வெளியிடுவோரை கைது செய்வதற்கான சிறப்பு நடவடிக்கை நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர், பொலிஸ் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகப் பிரிவினர் இது குறித்து சிறப்பு தரவுகளின் மூலம் விசாரணையைத் தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஜூன் 17 - ஜூலை 28 வரை 17 ஆயிரத்து 629 சிறுவர்களின் ஆபாச காணொளிகள் மற்றும் புகைப்படங்கள் இணையத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன.

இந்த பதிவேற்றலுடன் சம்பந்தப்பட்ட சில சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், ஏனையவர்களை கைது செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மேலும் தெரிவித்தார். (நி-5)

# ஐ.ம.சக்தியும் பொதுஜன முன்னணியும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவை

## வித்தியாசங்கள் இல்லை என்கிறார் மங்கள

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சக்தியில். இணைந்து கொள்ளுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்திக்கும் பொதுஜன முன்னணிக்கும் இடையே பாரிய வித்தியாசங்கள் இல்லை. இவை இரண்டுமே ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவைதான் என அவர் தெரிவித்துள்ளார்.

மங்கள சமரவீர மீண்டும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்பட முன்வந்தால் அது குறித்து கட்சித் தலைவருடன் பேசத் தயாராக உள்ளதாக கட்சியின் செயற்குழு உறுப்பினர் ரெஹான் ஜெய விக்கிரம நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இந்நிலையில் இதற்குப் பதிலளிக்கும் வகையில் தனது பேஸ்புக்கில் வெளியிட்ட சுருக்கமான அறிக்கையிலேயே மங்கள சமரவீர ஐக்கிய மக்கள் சக்தியின் அழைப்பை நிராகரித்துள்ளார்.

எனினும் ரெஹான் ஜெயவிக்கிரமவின் அன்பான அழைப்புக்கு நன்றி எனவும் மங்கள சமரவீர குறிப்பிட்டுள்ளார். (நி-5)



பொருட்களின் விலையேற்றம் மற்றும் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக மக்கள் விடுதலை முன்னணியினரால் திருகோணமலையில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கையில் தீப்பந்தங்களையும் ஏந்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அனுபவம்

ஒரு ஊரிலே ஒரு ஞானி இருந்தார். ஒருநாள் அவரைத் தேடிக் கொண்டு ஒருத்தர் வந்தார். வந்தவர் ஞானியைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

"ஐயா! உங்களுடைய சாதனை என்ன?" இதுதான் அவர் கேட்ட கேள்வி. இதைக்கேட்டதும் அந்த ஞானி நிமிர்ந்து இவரையும் பார்த்தார். அப்புறம் சொன்னார்.

அது ஒன்றும் பெரிய விடயமில்லை. அது ரொம்பவும் எளிமையான ஒன்று. எப்போது எனக்குப் பசிக்கின்றதோ அப்போது நான் சாப்பிடுவேன். எப்போது எனக்குத் தூக்கம் வருகின்றதோ அப்போது நான் தூங்குவேன் அவ்வளவு தான் அப்பா என்றார்.

கேள்வி கேட்டவர் ஒரு மாதிரியாக ஆகிவிட்டார். "ஐயா! இதையே தானே நாங்களும் செய்கின்றோம். இதில் என்ன அதிசயம் இருக்கின்றது?" என்றார்.

இப்போது அந்த ஞானி சொன்னார்... "இங்கே தான் நீங்கள் தவறு செய்கின்றீர்கள்" என்றார்.

"அப்படியா?" என்றார் அவர். "ஆமாம்" என்றார் இவர். "நீங்கள் செய்கின்ற தவறு எனக்குப் புரிகின்றது. ஏனென்றால் நான் உங்களை மாதிரியும் வாழ்ந்திருக்கின்றேன். அதனாலே என் அனுபவத்திலே உங்களுக்கும் எனக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை உணர முடிகின்றது!" என்றார்.

"என்ன சொல்லுகிறீர்கள் எனக்கு ஒன்றும் புரியவில்லையே!" என்றார்.

"இதோ பாருங்கள் சாப்பிடுவது என்பது நம்ம இரண்டு பேருக்கும் பொதுவான ஒரு காரியம் தான். ஆனால் நீங்கள் சாப்பிடுவதற்கும் நான் சாப்பிடுவதற்கும் வித்தியாசம் இருக்கின்றது" என்றார்.

"என்ன வித்தியாசம்?" என்று கேட்டார். "நீங்கள் பசி இல்லாத போது சாப்பிடுகிறீர்கள். இப்போது சாப்பிடுகின்ற நேரம் வந்து விட்டது என்பதற்காக சாப்பிடுறீர்கள். சாப்பாடு ருசியாக இருக்கின்றது என்பதற்காக சாப்பிடுகிறீர்கள். எது தேவை என்பது தெரியாமல் சாப்பிடுகிறீர்கள்.

அது மாதிரியே தூக்கமும் உங்களுக்கு ஒரு பழக்கமாக போய் விட்டது. இப்போது இது தேவையா? இல்லையா? என்பதை நீங்கள் பார்ப்பதில்லை. சாப்பிடும் போது ஆயிரம் வேலைகளை மனதிலே நினைத்துக் கொண்டிருப்பீர்கள். அதனாலே அது "சாப்பிடுதலாக" இருக்காது.

அதே மாதிரி தூங்கும் போது அது தூங்குதலா இருக்காது. ஏகப்பட்ட கனவுகள் வரும். உங்கள் மனது மேலும் மேலும் கனவுகளை உருவாக்கிக் கொண்டே இருக்கும்.

ஆனால் எனக்குள்ளே நடக்கின்றது அப்படி அல்ல. தூக்க உணர்வு வந்தவுடனே தூங்குதல் மட்டுமே நடைபெறும் அப்படி என்றார் அந்த ஞானி.

இப்போது வித்தியாசம் புரிகின்றதா? அந்த ஞானி சாப்பிடுவதை அனுபவிக்கிறார். அது Experience. நாம் அப்படி இல்லை. மனம் போன போக்கில் சாப்பிடுகின்றோம். இது Indulging.

இது இரண்டிலும் செயலிலே வேறுபாடு இல்லை. விழிப்புணர்விலே தான் வேறுபாடு இருக்கின்றது. அவர் சாப்பிடும் போது ஒரு சாட்சி மனோ பாவத்தோடு சாப்பிடுகிறார். எவ்வளவு தேவையோ அவ்வளவு தான் சாப்பிடுகிறார். ஏன் என்றால் அவருடைய விழிப்புணர்வு முழுமையாக செயற்படுகின்றது. அதனாலே அவர் சாப்பிடும் போது நம்மை விட மகிழ்ச்சியாக இருக்கின்றார்.

நாம் அப்படி இல்லை. வயிற்றை நிரப்புவதற்காக சாப்பிடுகின்றோம். இன்னும் சொல்லப்போனால் சாப்பிடும் போது நாம் அங்கே இருக்கின்றதில்லை. எங்கேயோ போய் விடுகின்றோம். உடம்பு மட்டும் தான் அங்கே இருக்கும்.

ஆனால் ஞானி அப்படி இல்லை. அவர் சாப்பிடும் போது சாப்பிடுதல் மட்டுமே இருக்கும். எந்த ஒரு செயலையும் விழிப்புணர்வுடன் செய்யலாம். மனம் போன போக்கிலும் செய்யலாம்.

விழிப்புடன் செய்யும் போது செய்யும் செயல் நம்ம அனுபவமாகின்றது அவ்வளவு தான். இதெல்லாம் பெரிய தத்துவம் மாதிரி தெரிகின்றது. இருந்தாலும் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னென்றால் எந்தக் காரியத்தை செய்தாலும் அதிலே முழு ஈடுபாடு வேண்டும் என்பது தான்.

அந்த அளவுக்கு முதலிலே நம்மை மாற்றிக்கொண்டால் போதும். ஆனால் நம்ம ஆளுங்க அந்த அளவுக்கு இருக்கின்றதில்லை. எல்லாமே அரைகுறைதான். கேட்டால் ஞாபக மறதி.

ஒருத்தன் என்ன செய்தான். விமான டிக்கெட் வாங்கிக் கொண்டு ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திட்டான். அப்புறம் தான் புரிந்தது தவறுதலாக இங்கே வந்துட்டோம் என்கிறது. உடனே அவசரமாக விமான நிலையத்தை நோக்கி ஓடினான்.

அங்கே கவுண்டரிலே கேட்டான்.

"மடம்! நான் தவறுதாக ரயில்வே ஸ்டேசன் போய் விட்டேன். இப்போ விமானத்தையும் தவற விட்டுவிட்டேன். அடுத்த பிளைட்டில் போக எனக்கு இதை மாத்தித் தர முடியுமா?" என்று கேட்டான்.

முடியாது! என்றார்கள் அந்த அம்மா.

"ஏன்" என்று கேட்டான். "ஏன் என்றால் இப்போது நீங்கள் வந்திருக்கின்றது பேருந்து நிலையம்!" அப்படி என்றார் அந்த அம்மா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

40

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



### உயர் நீதிமன்ற தீர்ப்பின் சுருக்கம்.

இந்த மசோதா அரசியலமைப்பின் உறுப்புரை பிரிவு 154G(3) இன் படி, மாகாண சபைகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்த மாகாண சபைகளுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அது முடியும் வரை உறுப்புரை 154G (3) இன் செயற்பாட்டின் மூலம், இந்த மசோதாவை பாராளுமன்றத்தின் ஆணைத்தாளில் செல்லுபடியாக வைக்க முடியாது, பின்னர் அது முடிந்தபின் சட்டமாக மாறும்.

எவ்வாறாயினும், அந்த நடைமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்துவது மாகாண சபைகளுக்குள் வரும் பகிர்ந்தளிக்கப்படும் அரச காணிகள் மாகாண சபைகளின் சட்டமன்றத் திறனுக்குள் வருவதால் என்ற காரணம் அல்ல. மாறாக மாகாண சபை பட்டியலில் கூறப்பட்டுள்ளவாறு மாகாண சபைக்குள் வரும் எந்தவொரு விடயத்தையும் கையாளும் சட்டங்களை இயற்றும் வழிமுறைகள் பட்டியலில் கூறப்பட்டுள்ளவாறு இருக்க வேண்டும் என்பதற்காகவே.

"This bill must be referred to the Provincial Councils for expression of their views, in terms of Article 154G(3) of the constitution. By operation of article 154G(3), the Bill cannot be validly placed on the Order Paper of Parliament and thereafter become law, until that is done. However, the Court reiterates that the said procedure must be adopted not because alienation of state land falls within the legislative competence of Provincial councils, but for the reason that the procedure for legislating acts which deal with any subject falling within the Provincial Council lists mandates that it should be so."

### உறுப்புரை154G (2), 154G (3) பின்பற்றாத சந்தர்ப்பம்

சாதாரண சட்டவாக்கங்கள் மற்றும் அதிகாரப் பரவலாக்கலை பாதிக்கும் அரசியலமைப்பு திருத்தச் சட்டங்கள் போன்றவை சம்பந்தமாக பாராளுமன்றமானது தனது சட்டவாக்க அதிகாரத்தை பயன்படுத்தும் பொழுது மதியுரை பெறல் மற்றும் இணக்கமான முறையில் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்கான அதிகாரப் பரவலாக்கலை பாதுகாக்கும் இந்த செயல்முறைமைகள் (உறுப்புரைகள் 154G (2),154G (3)) முக்கியமானவையாக உள்ளன.

இச் செயல்முறைகள் துரதிர்ஷ்டவசமாக பாராளுமன்றத்திலே சில சட்டங்கள் அல்லது சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்பட்டபோது பின்பற்றப்படவில்லை என்று கூறப்படுகிறது. எடுத்துக்காட்டாக 2001 ஆம் ஆண்டில் அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பொழுது நிதி ஆணைக்குழுவின் சில உறுப்பினர்களின் நியமன முறைஎ்ய அது மாற்றியமைத்ததுடன், தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் உட் கூற்றினையும் மாகாண பொலிஸ் அதிகாரங்கள்ளைச் செயற்படுத்துவதிலான தேசிய பொலிஸ் ஆணைக் குழுவுடனான ஜனாதிபதியின் செயற்பாடு குறித்தும் அது திருத்தங்களைக் கொண்டு வந்தது. 17 ஆவது திருத்தத்தை சட்டமாக்குவதற்காக பயன்படுத்திய செயல்முறைமைகளில் மாகாண சபைகளுடன் ஆலோசனைச் செயற்பாட்டில் இறங்குவதற்கான தேவைப்பாடுகளை உறுப்புரை 154 G (2) வெளிப்படையாக வேண்டி நின்றது. இந்த முக்கிய செயன்முறை பின்பற்றப்படாது போனதுடன் அதற்குப் பதிலாக அவசர தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அவசர சட்ட மூலங்களிற்கான செயன்முறையே பின்பற்றப்பட்டது.

கைக்கொள்ளப்பட்ட செயன்முறைகள் குறித்து எந்த மாகாண சபையும் சவால் விடுக்காததுடன், உறுப்புரை 154 G (2) இல் சொல்லப்பட்ட செயல்முறையின் பிரகாரம் சட்டமூலத்தின் 17 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற தேவைப்பாட்டையும், உறுப்புரை 122 இன் கீழ் உச்ச நீதிமன்றம் விசேட தீர்மானத்தின் மூலம் கேட்டு நிற்கவில்லை. அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் மாத்திரம் ஒவ்வாத வகையிலான பிழையான செயல் முறைமைகளைப் பின்பற்றி 17 ஆவது திருத்தமானது நிறைவேற்றப்பட்டதாக இதன் நிமித்தமாக விவாதிக்கப்பட்டது. ஆனாலும் பிற்பட்ட சம்பவங்களில் உச்ச நீதிமன்றமானது (மறைமுகமாக) உறுப்புரை 154 G (2) செயல்முறைமையினைப் பின்பற்றத் தவறியமையானது 17 ஆவது திருத்தத்தின் கேள்விக்குரிய தன்மையின் அரசியலமைப்பிற்கு ஒவ்வும் தன்மையை ஏற்படுத்தியது.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(4)- மாகாண சபைகள் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் மீது சட்டம் ஆக்கும்படி ஒரு மாகாண சபை அல்லது பல மாகாண சபைகள் தீர்மானத்தின் மூலம் பாராளுமன்றத்தை வேண்டுமிடத்து, பாராளுமன்றமானது சமுகமளித்து வாக்களிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களின் பெரும்பான்மை கொண்டு அம்மாகாண சபைகள் எம்மாகாணங்களுக்கென தாபிக்கப்பட்டிருக்கின்றவோ அம்மாகாணங்களுக்கு மட்டும் ஏற்புடையதாவதான சட்டத்தை அவ்விடயம் மீது ஆக்கலாம்.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(5)- (அ)ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் பாராளுமன்றம் தோதானதெனக் கருதுகின்றவாறாக எல்லா மாகாண சபைகளுடனுமான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னர் (இதன் பின்னர் "ஒருங்கிய நிரல்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்பதாம் அட்டவணையில் III ஆம் நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பாக பாராளுமன்றம் சட்டங்களை ஆக்கலாம். (ஆ) ஒவ்வொரு மாகாண சபையும், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவரக ஒவ்வொரு விடயத்தின் சூழ்நிலைகளிலும் அது தோதானதெனக் கருதுகின்றவாறாக பாராளுமன்றத்துடனான அத்தகைய கலந்தாலோசனையின் பின்னர் ஒருங்கிய நிரலில் உள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் அம்மாகாண சபை எம் மாகாணத்திற்கென தாபிக்கப்பட்டதோ அம்மாகாணத்திற்கு ஏற்புடையனவாகும் நியதிச் சட்டங்களை ஆக்கலாம்.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(6) மாகாணசபையினால் ஆக்கப்படும் நியதிச் சட்டத்தின் ஏற்பாடுகள் எதுவும் இந்த உறுப்புரையின் முற்போந்த ஏற்பாடுகளுக்கமைய ஆக்கப்பட்டுள்ள சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாததாக காணப்படுமிடத்து அத்தகைய ஆக்கப்பட்டுள்ள சட்டம் மேலோங்கி நிற்கும் என்பதோடு நியதிச்சட்ட ஏற்பாடுகள் ஒவ்வாதிருக்கின்ற அளவுக்கு செல்லுபடியற்றவை ஆதல் வேண்டும்.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(7) 9 ஆம் அட்டவணையில் நிரல் II என்ற நிரல் மத்திய அரசுக்குரிய ஒதுக்கு நிரலில் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சார்பாக மாகாண சபைகள் நியதிச் சட்டங்களை ஆக்க முடியாது.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154 G (8)இந்த அத்தியாயம் நடைமுறைக்கு வரும் திகதியில் மாகாண சபைகள் நிரலில் உள்ள ஏதேனும் விடயம் தொடர்பிலான சட்டமொன்று நடைமுறையில் இருக்கும்போது மாகாணத்திற்காக நிறுவப்பட்ட ஒரு மாகாண சபை பின்னர் அதே விடயத்தில் ஒரு நியதிச் சட்டத்தை உருவாக்குகின்றபோது, இந்நியதிச் சட்டம் இருக்கின்ற சட்டத்துடன் முரண்படுகின்றபோது அந்த நியதிச் சட்டம் ஒப்புதல் பெறும் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும், மேலும் அந்த நியதிச் சட்டம் நடைமுறையில் இருக்கும் வரை மட்டுமே, சட்டத்தின் விதிகள் இடைநிறுத்தப்பட்டு அந்த மாகாணத்திற்குள் செயற்படாது.

13 ஆவது திருத்தத்தில் உறுப்புரை 154G(9)- ஒருங்கிசை நிரலிலுள்ள ஒரு விடயம் தொடர்பிலான சட்டமொன்று இந்த அத்தியாயத்தில் வலுவுக்கு வருகின்ற திகதியன்று போது வலுவிலிருந்த ஒரு மாகாணத்திற்காக நிறுவப்பட்ட ஒரு மாகாண சபை ஒன்று, அதன் பின்னர் அதே விடயம் மீது அச்சட்டத்துடன் ஒவ்வாததான நியதிச் சட்டமொன்றை ஆக்குமிடத்து, அப்போது அச் சட்டத்தின் ஏற்பாடுகள் பாராளுமன்றத் தீர்மானத்தின் மூலம் முரணாகத் தீர்மானித்தாலொழிய நியதிச் சட்டம் சம்மதம் பெற்ற திகதியிலிருந்து அந்நியதிச் சட்டம் வலுவிலிருக்கின்றவரையில் மட்டுமே இடைநிறுத்தப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ பேருந்து- ஜீப் மோதி விபத்து; இரு பெண்கள் பலி, மூவர் படுகாயம்



(கொழும்பு)

பொலநறுவை, மன்னம்பிட்டி பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தொன்றில் இரு பெண்கள் உயிரிழந்ததுடன் மேலும் மூவர் படுகாயமடைந்துள்ளனர். இராணுவ பேருந்து- ஜீப் வாகனம் நேருக்கு நேர் மோதுண்டே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

பொலநறுவையிலிருந்து மன்னம்பிட்டிய தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு கொரோனாப் பாதிப்புக்குள்ளானவர்களை ஏற்றிச் சென்ற இராணுவ பேருந்தும் பொலநறுவை வைத்தியசாலைக்கு தொழிலாளர்களை ஏற்றிச் சென்ற சிறிய ஜீப் ஒன்றுமே விபத்தில் சிக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## 600 கோடி ரூபாய் பணப்பரிமாற்றம் பெண்ணொருவர் கைது

(கொழும்பு)

5 வங்கிகணக்குகள் ஊடாக போதைப்பொருள் வியாபாரத்தை மேற்கொண்டு வந்த பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெஹிவளைப் பகுதியில் வைத்து குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

41 வயதுடைய பெண் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 4 ஆண்டுகளாக குறித்த கணக்குகளில் 600 கோடி ரூபாவிற்கு அதிகமான பணப்பரிமாற்றம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இலங்கை மத்திய வங்கியின் நிதி விசாரணை பிரிவு வழங்கிய தகவலின் அடிப்படையில் குறித்த பெண் கைது செய்யப்பட்டுள்ளதுடன் குறித்த பெண்ணின் வங்கிக் கணக்கிற்கு பணத்தை வைப்பிலிட்டவர்கள் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



### விரதங்கள்

## சுக வாழ்வு அருளும் குருவாரம்



குரு விரத பலன்கள்

**வியாழக்கிழமைகளில் குரு பகவானை நினைத்து மேற்கொள்ளும் விரதம் 'குரு வார விரதம்' ஆகும்.**

**இந்த விரதம் இருப்பவர்கள் மஞ்சள் ஆடை அணிந்து குருவை வழிபட்டால் உயர்பதவி கிடைக்கும்.**

**செல்வச்செழிப்பு மேலோங்கும். சுக வாழ்வு, மன நிம்மதி கிடைக்கும். அறிவு விருத்தியடையும்.**

**மற்ற கிரக தோஷங்களால் ஏற்படும் துன்பங்கள் நீங்கும். திருமணத் தடை அகலும். குழந்தை பாக்கியம் கிடைக்கும்.**

**தீர்க்காயுள் அருளும்**
**கொண்டைக்கடலை**
**நைவேத்தியம்**

**கல்விக் கடவுள் சரஸ்வதி ஞானம் அருளும் தட்சிணாமூர்த்தி இருவருமே ஜெபமாலை, ஏட்டுச் சுவடிகளை கையில் ஏந்தியுள்ளனர்.**

**மனத்தூய்மை, சாந்தம், மெய் ஞானம் ஆகிய உயர் குணங்களை உணர்த்தும் வகையில் படிகமாலை, ஜடாமகுடம், சந்திரகலை ஆகியவற்றை இருவருமே கொண்டுள்ளனர். கொண்டக்கடலையை உயிர் காக்கும் சத்துக்களை கொண்டது.**

**ஒருவரது ஜாதகத்தில் குருபலம் இல்லையென்றால் அவரது உயிருக்கு பாதகம் ஏற்படும்.**

**எனவே குரு பார்வை வேண்டி குருவுக்கு குருவின் அம்சமான தட்சிணாமூர்த்திக்கும் கொண்டக்கடலை மாலை படைத்து வழிபட்டால் குருபகவான் தீர்க்காயுள் அருள்வதாக ஐதீகம்.**

**இதனால் கொண்டக் கடலையை நெய்வேத்தியமாக படைக்கின்றனர்.**

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## 24 மணி நேரத்தில் மேலும் 112 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப் படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப் பகுதியில் 112 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 52 ஆயிரத்து 513 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

## மதுவரி சுற்றிவளைப்புகளால் 61 மில்லியன் வருமானம்

(கொழும்பு)

இந்த வருடத்தின் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நாடளாவிய ரீதியாக 19 ஆயிரத்து 641 சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தத் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக தயாரிக்கப்பட்ட மதுசாரத்தை கைவசம் வைத்திருந்தமை, விநியோகித்தமை மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த சுற்றிவளைப்புக்களின் போது 19 ஆயிரத்து 641 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் இரண்டாயிரத்து 602 பேர் பெண்கள் என மதுவரித் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைதானவர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற நடவடிக்கைகள் மூலம் 61 மில்லியன் ரூபாய் வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளது என மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-5)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 180 | 220 | 180 | 240 |
| தக்காளி | 80 | 80 | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 | 40 |
| கோவா | 160 | 170 | 180 | 200 |
| கரட் | 120 | 180 | 200 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 80 | 90 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 180 | 220 | 250 | 240 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பாகற்காய் | 250 | 200 | 270 | 300 |
| வெண்டிக்காய் | 70 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 160 | 160 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 100 |
| லீக்ஸ் | 200 | 220 | 200 | 240 |
| பீற்றூட் | 140 | 120 | 140 | 150 |
| கறிமிளகாய் | 300 | 320 | 260 | 320 |
| முருங்கைக்காய் | 200 | 150 | 250 | 140 |
| போஞ்சி | 250 | 300 | -- | 320 |
| கத்தரிதம்புள்ள | 120 | 80 | -- | 100 |
| கீரை - 1 பிடி | 50 | 40 | 50 | 50 |
| தேசிக்காய் | 140 | 80 | 120 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | -- | -- | 280 | -- |
| வெங்காயப்பூ | 180 | 170 | 260 | 200 |
| முள்ளங்கி | 120 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 30 | 60 | 30 |
| வல்லாரை | 20 | 50 | 30 | 20 |
| ஈரப்பலா | 50 | 50 | 40-50 | 50 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சீலனின் தந்திரம்



அன்று மாலை சீலன் தான் வாங்கிய ஓவியத்தை மன்னனிடம் காட்டினான்.

"ஆகா! எவ்வளவு அழகாக இருக்கிறது. இதை எனக்குக் கொடுத்துவிடு," என்றான் மன்னன்.

"நான்தான் இந்த மாதிரி பொருள்களை யாருக்கும் கொடுக்க மாட்டேன் என்பது உங்களுக்குத் தெரியுமே. நீங்கள் கேட்டும் பயனில்லை!" என்று கூறிவிட்டான்.

சில வருடங்கள் சென்றன. ஒரு நாள் சீலன் மன்னனுடன் பேசிக் கொண்டிருக்கையில் அங்கு வந்தான் சக்தி.

அவனை அன்புடன் வரவேற்று மன்னனுக்கும் அறிமுகம் செய்து வைத்தான் சீலன்.

"நீ எப்படி இருக்கிறாய்?" என்று விசாரித்தான் சீலன்.

"ஐயா! நீங்கள் கொடுத்த நூறு பவுண்களைக் கொண்டு வியாபாரம் செய்யத் தொடங்கி இப்போது உயர் நிலையில் இருக்கிறேன்.

உங்களிடம் ஒரு உதவியை நாடியேஇப்போது வந்திருக்கிறேன்," என்றான்.

"என்ன வேண்டும்?"

"நான் அந்த ஓவியத்தைத் தங்களுக்கு விற்ற நாளிலிருந்து எனக்கு மன நிம்மதியே இல்லை. தயவு செய்து அதை நீங்கள் எனக்குத் திருப்பிக் கொடுத்துவிடுங்கள்.

அதற்காக நீங்கள் என்ன கேட்டாலும் நான் கொடுக்கிறேன்," என்றான்.

சக்தியின் மனநிலை அவனுக்கு புரிந்தது.

ஆனால், மன்னனோ தான் கேட்டும் அந்த ஓவியத்தைக் கொடுக்க முடியாது என்று கூறிய சீலன் என்ன செய்யப் போகிறான் என்று கூர்ந்து கவனிக்கலானான்.

"நான் ஒருமுறை ஒரு பொருளை வாங்கி விட்டால் அதை யாருக்கும் கொடுக்கமாட்டேன். இது என் கொள்கை," என்றான். (தொடரும்)

# மகாபாரதம்




போர்க் கருவிகளை உன்னைப் போல யாரால் அவ்வளவு அற்புதமாகப் பயன்படுத்த முடியும்?உனக்கு இணையானவன் மூவுலகிலும் இல்லை.

அதற்காக நான் பெருமிதம் அடைகிறேன். ஆயினும் தம்பி, நீ சாத்திரம் பற்றிப் பேசாதே.

செல்வம் பெரிது என்கிறாய். அதிலும் மண்ணாள் செல்வம் யாருக்கு வாய்க்கும் என்கிறாய். செல்வம் நிலையற்றது.

இதனை உணர்ந்து தவம் மேற்கொள்பவர் நிலையான முக்தி இன்பம் அடைவர். எல்லாவற்றையும்தியாகம்செய்பவன் எவனோ அவனே நற்கதி அடைகிறான். தியாகம் என்பது நம்மிடம் உள்ள பொருட்களைப் பிறருக்கு தருவது மட்டும் அன்று. உள்ளத்தில் தோன்றும் தீய எண்ணங்கள் அனைத்தும் விட்டு விடுவதும் தியாகம் தான்.

நற்பண்புகளை எடுத்து உரைக்கும் ஆகமங்களைக் கற்பவர் இந்த உண்மையை அறிவர்.

கண்களால் காண முடியாததும் வார்த்தைகளால் வருணிக்க முடியாததுமான ஆன்மா தான் செய்யும் கர்ம வினைகளுக்கு ஏற்பப் பல்வேறு பிறவிகளில் உழன்று வருகிறது.

அஞ்ஞானத்தால் ஏற்படும் இந்த கர்ம வினைகளை நல்ல ஞானத்தால் அழித்து விட்டு மோட்ச மார்க்கத்தில் செல்ல வேண்டும். தம்பி, துறவிகளால் போற்றப்பட்ட இம் முக்திப் பாதையை விட்டு பல துன்பங்களுக்குக் காரணமான செல்வத்தை நீ ஏன் விரும்புகிறாய்? வினையின் கொடுமையை நன்கு உணர்ந்த ஆகம அறிவு மிக்கவர் பொருளைப் பெரிதென ஒரு நாளும் பாராட்ட மாட்டார்கள்.

தருமம் தெரிந்தவர்களோவைராக்கிய சிந்தை உடையவர்களாகிப் பொருள்மீதுள்ள பற்றை அறவே விலக்கிப் பரம பதத்தை அடைகின்றனர்.

ஆகவே, அருச்சுனா இது குறித்து நீ அதிகம் பேச வேண்டாம்" என்று கூறி தருமர் தன் கருத்தில் உறுதியாக இருந்தார்.

**வியாசர் அறிவுரை**

அசைக்க முடியாத தருமரின் மனதை மாற்ற வியாசர் கூறுகிறார். "தருமா இல்லற தருமமே சிறந்த தருமமாகும் என சாத்திரங்கள் கூறுகின்றன. சாத்திரப்படி நீ நடந்து கொள்ள வேண்டும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எல்லா மக்களையும் சில நாட்களுக்கும், சில மக்களை எல்லா நாட்களுக்கும் முட்டாளாக ஆக்க முடியும்; ஆனால் எல்லோரையும் எப்போதும் முட்டாள்களாக்க முடியாது. - ஆப்ரகாம் லிங்கன்*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்குக் கிழக்குக்கென வழங்கப்பட்ட சினோபார்ம்

முந்தைய தமிழ்ப் பாடப் புத்தகங்களில் தெனாலிஇராமனின் கதைகள் வெளிவருவது வழக்கம்.

அவ்வாறு வெளிவந்து நாம் படித்த கதைகளில் ஒன்று கோழியைத் திருடிய பெண்ணை தெனாலிஇராமன் கண்டறிந்த மதிநுட்பம் பற்றியதாகும்.

ஒரு நாள் இரண்டு பெண்கள் தெனாலி இராமனிடம் சென்றனர்.

ஐயா! இந்தப் பெண் என் கோழியைத் திருடி அதனை உரித்து இறைச்சியாக்கிச் சாப்பிட்டு விட்டார்.

நானோ பரம ஏழை. எனக்கு நீதி பெற்றுத் தாருங்கள் என்று கூறினார்.

உன் கோழியை அந்தப் பெண் திருடியதைக் கண்ட சாட்சிகள் உண்டா? என தெனாலி இராமன் கேட்க, அதற்கு இல்லை என்பது பதிலாக இருந்தது.

குற்றம் சாட்டப்பட்டவரைப் பார்த்து பெண்ணே! நீ அந்தப் பெண் வளர்த்த கோழியைத் திருடியது உண்மையா? என வினவினார் தெனாலி இராமன்.

அதற்கு குற்றம்சாட்டப்பட்ட பெண்; ஐயா! நான் திருடவே இல்லை என்றார்.

அப்படியானால், நான் எதுவும் செய்ய முடியாது என்று தெனாலிஇராமன் கூறிவிட, இரண்டு பெண்களும் அந்த இடத்தை விட்டு புறப்பட்டனர்.

அப்போது தெனாலிஇராமன் அதோ! அந்தப் பெண்ணின் தலையில் கோழி இறகு இருக்கிறது என்று கூற, சட்டென்று தன் தலையைத் தடவினார் குற்றம் சாட்டப்பட்ட பெண்.

இதனை வைத்துக் கொண்டு சம்பந்தப்பட்ட பெண்ணே கோழியைத் திருடினார் என்று தெனாலிஇராமன் அனுமானிக்க, ஈற்றில் தனது குற்றத்தை ஏற்றுக் கொண்டார் அந்தப் பெண்.

ஆக, தெனாலிஇராமனின் இந்தக் கதை துப்புத்துலக்குகின்ற மதிநுட்பத்தை புலப்படுத்துவதற்கானதென்பது தெரிந்ததே.

இவை ஒருபுறமிருக்க, ஒருவரின் செயல், ஒருவரின் வார்த்தைப் பிரயோகம் என்பன சில உண்மைகளை வெளிப்படுத்திவிடும்.

சிலவேளைகளில் அவை சந்தேகங்களையும் ஏற்படுத்தும்.

அந்தஅடிப்படையில், சீன அரசாங்கத்தினால் வடக்கு, கிழக்குக்கென 16 இலட்சம் சினோபார்ம் மருந்து வழங்கப்பட்டு தற்போது அந்த மருந்து வடக்குக் கிழக்கு மக்களுக்கு ஏற்றப்பட்டு வருகிறது.

இது உண்மையில் நல்ல விடயம். வரவேற்கப்பட வேண்டியது.

இருந்தும் எம் சின்ன வயதில் தெனாலி இராமனின் மேற்போந்த கதையைப் படித்த பாதிப்போ என்னவோ! எதிலும் ஒரு சந்தேகம். ஐயம்.

நடைமுறையில் சினோபார்ம் மருந்தை, இலங்கை அரசாங்கத்துக்கு விநியோகிக்க, அந்த மருந்தில் ஒரு பகுதி வடக்குக் கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து வடக்கு கிழக்கு மக்களுக்கென குறித்துரைத்து, சினோபார்ம் மருந்தை வழங்கும்போது, என்னவோ ஏதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அந்த எண்ணத்தின் எழுகைக்கு இலங்கை அரசாங்கமும் காரணமாகவுள்ளது என்பதைக் கூறித்தானாக வேண்டும்

அதாவது வடக்கிற்கு என புதிய மின்சார இயந்திரத்தை வெளிநாடு வழங்கினால் அதனைச் சிங்கள மக்கள் வாழ்கின்ற மாகாணத்துக்கு அனுப்பிவிட்டு, அங்குள்ள பழைய மின் இயந்திரத்தை வடக்குக்கு அனுப்புகின்ற அரசாங்கம், சினோபார்ம் மருந்தை மட்டும் வடக்கு கிழக்கு மக்களுக்கென விசேடமாக வழங்க அனுமதித்தது எதற்காக? இந்த ஐய வினாக்களுக்கு விடை தேடுகின்ற பொறுப்பு எங்கள் மருத்துவ சமூகத்துக்கே உரியதாம்.

## யாழில் கொரோனா அபாயம் தீவிரம்

# திருமணம், வழிபாட்டு தலங்களுக்கான புதிய சுகாதார கட்டுப்பாடுகள் அமுல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று பரவல் அபாயம் காணப்படும் நிலையில் திருமணம் உள்ளிட்ட நிகழ்வுகள் மற்றும் வழிபாட்டு தலங்களுக்கான புதிய சுகாதார பாதுகாப்பு நடைமுறை யாழ். மாவட்ட செயலரினால் வெளியிடப்பட்டிருக்கின்றது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கைக்கு அமைய இந்த பாதுகாப்பு நடைமுறை அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

குறித்த விதிகள் மாவட்டத்தில் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி புதிய வழிகாட்டல்களாக..

**வழிபாட்டு தலங்களுக்கான கோவிட் -19 சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள்**

**01.** வழிபாட்டிடங்களில் போதியளவில் கை கழுவும் வசதி ஏற்பாடு செய்யப்பட்டு வருகை தரும் அனைவரும் கை கழுவுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**02.** வழிபாட்டிடங்களில் வருகைதரும்அனைவரும் சரியான முறையில் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்

**03.** வழிபாட்டிடங்களில் சமூக இடைவெளி (தனிநபர்களுக்கிடையேயான இடைவெளி 1 மீற்றர் ) பேணுவதனை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

**04.** கை கழுவுதல், முகக்கவசம் அணிதலை உறுதிப்படுத்த குறிப்பிட்ட ஒருவரை நியமிக்க வேண்டும்.

**05.** வழிபாட்டிடங்களினுள் வழிபாட்டு நடவடிக்கைகளில் அதிகூடிய அளவில் ஒரே நேரத்தில் 100 பேர் மாத்திரமே ஒன்று கூடமுடியும். இந்த அதிகூடிய எண்ணிக்கையினை பிரதேச அபாயநிலை, வழிபாட்டிடத்தின் அளவின் அடிப்படையில் சமூக இடைவெளியுடன் (தனிநபர்களுக்கிடையேயான இடைவெளி 1 மீற்றர்) இருக்க கூடிய நபர்களின் எண்ணிக்கை என்பவனவற்றின் அடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரி மேலும் குறைக்க முடியும்.

**06.** வெளி வீதியில் எதுவிதமான திருவிழாக்கள், பக்தர்கள் ஒன்று கூடுதல், சுவாமி உலாவருதல், அன்னதான நிகழ்வுகள், தண்ணீர் பந்தல்கள் மற்றும் காவடி எடுத்தல் போன்ற நிகழ்வுகளை நடாத்த முடியாது.

**07.** பக்தர்களுக்கு விபூதி பூசி விடுதல் மற்றும் பிரசாதம் வழங்குதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

**08.** வழிபாட்டுத்தலவளாகத்தினுள்ளோ வெளியிலோ தேவையற்ற விதத்தில் பொதுமக்கள் கூடிநிற்றல் ஆகாது.

**09.** வழிபாட்டு தலங்களிற்கு வருகை தருவோரின் பெயர் விபரங்கள் கட்டாயம் பேணப்பட வேண்டும்.

**10.** மேற்படி விதிமுறைகளை கடைப்பிடிப்பதனை வழிபாட்டு தலத்திற்கான நிர்வாகம், மதகுருமார்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**திருமணங்கள், பூப்புனித நீராட்டு விழா, பிறந்தநாள் விழாக்களுக்கான கோவிட் -19 பாதுகாப்பு நடைமுறைகள்**

**01.** இவ்வைபவங்களை மண்டபங்களிலோ வீட்டிலோ நடாத்தும் போது பின்வரும் விடயங்களை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

**02.** இவ்வைபவங்களுக்கான அனுமதியினை தங்கள் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரியிடம் முன்கூட்டியே பெற்றுக்கொள்ள வேண்டும்.

**03.** இவ்வைபவங்களின்போது போதியளவில் கை கழுவும் வசதி ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

**04.** இவ்வைபவங்களுக்கு வருகைதரும் அனைவரும் சரியான முறையில் முகக்கவசம் அணிந்திருத்தல் வேண்டும்.

**05.** இவ்வைபவங்களின் போது சமூக இடைவெளி (தனி நபர்களுக்கிடையேயான இடைவெளி 1 மீற்றர் ) பேணுவதனை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

**06.** இவ்வைபவங்களின்போது கை கழுவுதல், முகக்கவசம் அணிதலை உறுதிப்படுத்த குறிப்பிட்ட ஒருவரை நியமிக்க வேண்டும்.

**07..** இவ்வைபவங்களில் பங்குபற்ற கூடிய, அதிகூடிய நபர்களின் எண்ணிக்கையினை பிரதேச அபாய நிலை, மண்டபத்தின் அளவின் அடிப்படையில் சமூக இடைவெளியுடன் (தனி நபர்களுக்கிடையேயான இடைவெளி 1 மீற்றர்) இருக்க கூடிய நபர்களின் எண்ணிக்கை என்பவனவற்றின் அடிப்படையில் சுகாதார வைத்திய அதிகாரி தீர்மானிப்பர்.

**08.** இவ்வைபவங்களில் பங்குபற்றுவோரின் பெயர் விபரங்கள் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கு கட்டாயம் சமர்ப்பிக்க வேண்டும். (ம)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ். பிரதேசத்தில்** ஆவரங்கால் சந்தை, ஆவரங்கால் சிவன் கோவில், கலைமகள் சந்தி, குட்டியப்புலம், மட்டுவில் வீதி, மஸ்கன் வீதி ஈவினை, நாவற்காடு அச்சு வேலி, நிலாவரை, பெரிய பொக்கணை, புத்தூர், இராஜ வீதி, நவக்கிரி, சிறுப்பிட்டி மேற்கு- வைரவர் கோவிலடி, சுதந்திரபுரம், ஊறணி, வாதரவத்தை வீரவாணி, தவமயா, ஆழியவளை கட்டைக்காடு, கட்டைக்காடு இராணுவ முகாம் (55ம் பிரிவு) கேவில், முள்ளியான், வெற்றிலைக்கேணி, வெற்றிலைக்கேணி முள்ளியான் இராணுவமுகாம், 55ம் பிரிவு இராணுவ முகாம் கட்டைக்காடு ஆகிய இட ங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** ஆண்டாங்குளம், கண்ணாட்டி, கறுக்காய்குளம், குருவில், பாலைப் பெருமாள் காடு (மணல் மோட்டை) பள்ளிவாசல் பிட்டி, பரப்பாங்கண்டல், பரப்புக்கடந்தான், வட்டக்கண்டல் வண்ணமோட்டைச் சந்தி ஆகிய பிரதேசங்களிலும் தடைப்படும்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### ஐம்புலன்களின் இயல்பே ஞானம்

விழிப்பு நிலையில் ஐம்புலன்களின் உணர்வும் சிந்திக்கின்ற ஆற்றலும் உள்ளன. ஆகையால் உடலின் ஒவ்வொரு அணுவும் ஐம்புலன்களின் எல்லாச் செயல்களையும் செய்யும் உள்ளார்ந்த வல்லமையை உடையது.

எல்லா அணுக்களுக்கும் பொது அமைப்பு ஒன்றாகவே உள்ளது. ஒவ்வொரு டி.என். ஏவிற்கும் உடற்செயல்கள் எல்லாவற்றையும் செய்யும் வல்லமை் உள்ளது. நனவு நிலை என்பது எல்லா அணுக்களிலும் உள்ளார்ந்து அமைந்துள்ளது.

ஒவ்வொரு உணர்ச்சித் தூண்டலும் மெய்யுணர்வின் இயல்பாகிய ஞானத்தைக் கொண்டு வருகிறது. பார்வை நமக்கு நீலம், சிவப்பு, பச்சை என்ற நிற பேத அறிவைத் தருகிறது. அறிதல் விழிப்பு நிலையின் இயல்பு.

(தொடரும்)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

முட்டை, மாமிசம் முதலிய உணவுகளைப் பிராமணர்கள் மட்டுமன்று மற்ற யாருமே அருந்தக்கூடாது. புலால் உணவு கொடுங்குணத்தை விளைவிக்கிறது. தவார உணவு சாந்தத்தைத் தருகின்றது.

புலால் உண்ணுகின்ற இரண்டு புலிகள் ஒன்று சேரமாட்டா. புல்லும் தழையும் உண்ணுகின்ற ஆடு, மாடுகள் ஒன்றுபட்டு வாழ்கின்றன. ஆட்டு மந்தை, மாட்டு மந்தை என்று காண்கின்றோம். நாய், புலி, மந்தை என்று காண்கின்றோமா? ஆதலால் புலால் பொருந்தாத உணவாகும். (தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு வழங்கும்

# முதுமையில் இயற்கையுடன் இயைந்த ஆரோக்கிய வாழ்வு


வைத்திய கலாநிதி. (செல்வி) வினோதா சண்முகராஜா,
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவ அலகு,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

கலாநிதி. (திருமதி) கௌரி ராஜிகுமார்,
சிரேஷ்ட விரிவுரையாளர், தாவரவியல் துறை, விஞ்ஞான பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

அறிமுகம்

ஆரோக்கியம் என்பது தனிநபர் சார்ந்த உடல், உள, ஆன்மிக, சமூக நன்னிலையாகும். ஒருவரது முதுமைப்பருவமானது அவரது ஆயுளில் தங்கியுள்ளது. நம் முன்னோர்கள் கூற்றுப்படி ஒருவரின் ஆயுட்காலம் 100 வருடங்களாக இருந்தது. தற்போது இவ் ஆயுட்காலம் படிப்படியாக குறைந்து 2021 இல் இலங்கையில் அண்ணளவாக 77 ஆண்டுகளாகக் காணப்படுவதன் காரணம் என்ன? இது இன்றைய காலகட்டத்தில் முக்கியமாக சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

முதுமை என்றால் 'முதிர்ச்சி அடைதல்' என்று பொருள். பொதுவாக ஒருவரின் ஆயுட் காலத்தை முடிவு செய்யும் முதல் காரணி அவரது மரபணு. அவரது பரம்பரையில் பெற்றோர்கள் மற்றும் முன்னோர்கள் நீண்ட ஆயுளைப் பெற்றிருந்தால் அந்த நபர் அதிக ஆண்டுகள் வாழ்வதற்கான சாத்தியம் அதிகம். ஆயினும் ஒருவரின் ஆயுளைத் தீர்மானிப்பதில் அவரின் உணவு நடைமுறைகள், பழக்கவழக்கங்கள் முதலியனவும் அதிகளவில் செல்வாக்குச் செலுத்துகின்றன. உதாரணமாக எளிதில் செரிக்கக்கூடிய, போசணை நிறைந்த, நார்த்தன்மையான உணவுகளை உள்ளெடுத்தல், புகையிலை சார்ந்த பொருட்கள், மதுபானம் புகைப்பிடித்தல் போன்ற பழக்கங்கள் இல்லாவிட்டால் புற்றுநோய் போன்ற பாரிய நோய்களும், நீரிழிவு மற்றும் இரத்த அழுத்தம் போன்ற நோய்த்தாக்கங்களும் குறைவதனால் உடல் உறுப்புக்கள் சிறப்பாக செயற்பட்டு நீண்ட நாட்கள் வாழ ஏதுவாக இருக்கும். மேலும் தொடர்ந்து உடற்பயிற்சி செய்வது கூட ஒருவரின் உடல் நலத்தை பேணி அவரது ஆயுளை அதிகரிக்கும்.



**"இளமையில் முக அழகு"...**
**"முதுமையில் ஆன்மா அழகு"...**

பொதுவாக முதுமைப்பருவம் என்பது இன்னொரு குழந்தைப் பருவம் அல்லது இரண்டாம் குழந்தைப்பருவம் என்றால் மிகையாகாது.

**'ரசிக்கப்படாத இன்னொரு குழந் தைப்பருவம் முதுமை'.**

உண்மையில் இலங்கையில் 60 வயதிற்கு மேற்பட்டவர்களை முதியவர்கள் என்று கூறாமல் நாட்டின் மூத்த பிரஜைகள் என்ற அடைமொழியுடன் மதிக்கப்படுவது வழக்கம்.

இன்றைய இளையவர்கள்நாளைய மூத்த பிரஜைகள் என்பதைக் கருத்திற்கொண்டு புரிந்துணர்வுடனும் விட்டுக்கொடுப்புடனும் அன்புடனும் மூத்த பிரஜைகளைக் கவனிப்போமேயானால் அவர்களின் உள ஆரோக்கியம் என்றும் மேம்பட்டுக் காணப்படும்.

அதே போலவே மூத்த பிரஜைகளான மதிப்பிற்குரிய எம் முதுமைப்பருவத்து உறவுகளும், தமது கடந்த கால நிகழ்வுகளையும் அனுபவங்களையும் கருத்திற் கொண்டு இளையவர்கள் மற்றும் தமது குடும்பத்தாரின் சமூக குடும்ப சூழ்நிலைக்கு ஏற்றவாறு அனுசரித்து போவார்களாயின் குடும்ப நலம், சமூக நலம் சிறப்பாகப் பேணப்படும்.

முதுமை என்பது இறைவனால் வழங்கப்பட்ட வரம், சாபமல்ல. முதுமைப்பருவம் என்பது என்ன? வாழ்வியல் மாற்றத்தில் ஏற்பட்ட இன்ப துன்ப நிகழ்வுகளை அனுபவித்து விட்டு அந்த அனுபவங்களை அசை போடுவது மட்டுமன்றி, வாழ்வின் ஏற்ற இறக்கங்களைப் பார்த்து பக்குவப்பட்டதுடன், குடும்பம் மற்றும் சமூகத்திற்குச் செய்ய வேண்டிய கடமைகளை ஓரளவிற்கு நிறைவேற்றிய திருப்தியில் பிறவிப்பயனை மீட்டிப் பார்க்கும் ஒரு பருவம்.

இக்காலப்பகுதியில் ஆரோக்கியம் என்பது மிகவும் இன்றியமையாதது. திருமூலர் கூறியவாறு நரை, திரை பிணி, சாக்காடு, இன்றி உடலை கல்லைப்போல பாதுகாத்தலாகிய காய கற்பம் முறையை கடைப்பிடித்து முதுமையில் உடல், உள ஆன்மிக நன்னிலையைப் பேணின் சமூக நன்னிலை சிறப்பாக ஏற்படும்.

இளைப்பாறும் இப்பருவத்தில் அவரவர் வசதிக்கு ஏற்ப இந்த பருவத்தை திட்டமிட்டு மகிழ்ச்சியாக அனுபவிக்க வேண்டும். நீண்ட ஆயுளைப் பெற்று இம் முதுமையை ஆண்டு அனுபவித்து வாழ்பவர்கள் உண்மையில் பாக்கியசாலிகள். ஆனால் இப்பாக்கியம் அனைவருக்கும் கிடைப்பதில்லை. இவ் இனிய பருவத்திலே தான் மணிவிழா, பவளவிழா போன்றன கொண்டாட முடியும். நான்கு, ஐந்து தலைமுறை குடும்பங்கள் என பெருமையாகக் கூற முடியும்.

**'1000 புத்தகங்களைக் கொண்ட நூலகத்திற்குச் சமம் தாத்தா, பாட்டி உள்ள வீடு'.**

'இளமை முதல் முதுமை வரையான சகல பருவங்களையும் அந்தந்த காலத்திற்குரிய இன்ப துன்பங்கள் மற்றும் அனுபவங்களுடன் இனிமையாக கடந்து செல்வதே சிறந்த வாழ்க்கை. எனவே இம் முதுமைப் பருவத்தை ஆரோக்கியமாகக் கடந்து செல்ல வேண்டாமா? இனிமையான இளமை போல மகிழ்வான முதுமை என்று மாற்ற வேண்டாமா? எனவே முதுமையும் பொன்னானது. அதனை எதிர்கொண்டு மகிழ்வுடன் வாழ அனைவரும் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

**உடல் ஆரேக்கியத்தைப் பேணும் போது, உணவு நடைமுறைகள்.**

**'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு**
**அருந்தியது அற்றது போற்றி உணின்'.**

எனும் திருவள்ளுவர் கூற்றிற்கிணங்க உணவுப்பழக்க வழக்கத்தை சரிவர கடைப்பிடித்தல் அவசியம்.

◆ அஜீரணம், நெஞ்சு எரிச்சலைத் தடுப்பதற்கு நேரத்திற்கு சாப்பிடும் பழக்கத்தை பின்பற்ற வேண்டும். மூன்று வேளை வயிறு முட்ட சாப்பிடுவதற்குப் பதிலாக 6 வேளை அளவாக உண்பது நல்லது. பற்கள் கொட்டிப் போவதன் காரணமாக திட உணவுகளைத் தவிர்த்து நல்ல வேக வைத்த தானியங்கள், காய்கறிகள், பழங்கள் என கூழ், பழரசம், கஞ்சி, பானம் போன்றவற்றை வழங்கலாம். சாதம், பருப்பு போன்றவற்றை மசித்து கூழ்நிலையில் உண்ணலாம். ரவை உப்புமாவிற்கு பால், பேரீச்சம்பழம், திராட்சை வற்றல் சேர்த்து மிக்சியில் அடித்து கூழாக வழங்கலாம். இலைக்கஞ்சியாக பருகலாம். உணவு ஜீரணமாக தினமும் மோர் அருந்துதல் வரவேற்கத்தக்கது. காலையில் உணவு அருந்திய பின் 2 மணி நேரம் கழித்து பழச்சாறு அல்லது உகந்த தேநீரை சக்கரைக்குப் பதில் சுத்தமான தேன் கலந்து அருந்துதல்.

◆ அதிகளவிலான பச்சைக் காய்கறிகளை உள்ளெடுத்தல். வளர்சிதை மாற்றங்களை கருத்திற் கொண்டு புரதம் கூடிய காய்கறிகளான தக்காளி, முட்டைக் கோஸ், வெங்காயப்பூண்டு, சக்கரைவள்ளிக் கிழங்கு, காளான், ப்ரோக்கோலி போன்றவற்றை உள்ளெடுப்பதன் மூலம் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கலாம். வெங்காயத்தை அதிகளவில் உணவில் சேர்ப்பதன் மூலம் உடல் உஷ்ணத்தை சமப்படுத்தலாம், நாடித்துடிப்பைச் சீராக்கலாம். முதுமைப்பருவத்தில் ஏற்படும் கடுமையான இருமலுக்கு வெங்காயத்தை வதக்கி வெல்லம் சேர்த்து உண்ணல் சிறப்பு. கருணைக்கிழங்குக் கறி அல்லது அரையல் மூல நோயைக் குணமாகும்.

◆ செந்நிறமுடைய மரக்கறிகளான கரட், பீற்றூட் போன்றனவும் உடலில் ஆக்சிஜனேற்றத் தடுப்பான் ஆக தொழிற்பட்டு உடலை இழைய அழிவுகளிலிருந்து பாதுகாக்கின்றது.

◆திணை, சிறுசோளம், கேழ்வரகு, ராகி, சாமை, குதிரைவாலி, காடை கன்னி முதலான சிறு தானியங்களை உணவில் அதிகளவில் சேர்த்தல். இவற்றைச் சாதமாக, கஞ்சியாக, பொரியாக, பிரியாணியாக அல்லது கூழாக உண்ணலாம். இச்சிறுதானியங்களில் புரதம், விற்றமின் பி, பொஸ்பரஸ், பொட்டாசியம், இரும்புச் சத்து, மக்னீசியம் ஆகியவையும் நார்ச்சத்தும் அதிகளவில் காணப்படுவதனால் இலகுவில் செரிமானம் ஏற்படும், மலச்சிக்கல் ஏற்படாது, உடலிற்குரிய போசணை நிறைவாகக் கிடைக்கும். ஆயுளை அதிகரிக்கும். குரக்கன் மற்றும் ராகி போன்றன நீரிழிவு மற்றும் கொலஸ்ரோல் போன்ற நிலைகளை சீராக்கும். பொதுவாக வரகரிசி சோறும் மோரும் சேர்த்து உள்ளெடுத்து வர சலரோகம் படிப்படியாகக் குறையும் என்று எமது சித்தர்கள் சிறப்பாக கூறியுள்ளதையும் கவனிக்க வேண்டும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் இளைஞர்களை தாக்கி சித்திரவதை

## 4 பெண்கள் உட்பட ஐவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழில் இளைஞர்களை தாக்கி, சித்திரவதை புரிந்த குற்றச்சாட்டில் நான்கு பெண்கள் உள்ளிட்ட ஐந்து பேர் யாழ்ப்பாண பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாவாந்துறை பகுதியில் புறா வளர்த்த இரண்டு இளைஞர்களுக்கு இடையில் ஏற்பட்ட தர்க்கம் மோதலாக மாறியது.

அந்நிலையில் தாக்குதலை நடத்திய இளைஞர்கள், தாக்குதலுக்கு உள்ளான இளைஞர்களிடம் சமரசம் பேச முற்பட்ட போது, பெண்கள் குழுவொன்று சமரசம் பேச வந்த இளைஞர்கள் நான்கு பேரை தாக்கி, அவர்களின் முகங்களில் மிளகாய் தடவி சித்திரவதை புரிந்து அதனை காணொளியாக சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளனர்.

பெண்களின் சித்திரவதைக்கு உள்ளான இளைஞர்களில் ஒருவர் கடந்த 27 ஆம் திகதி தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துள்ளார்.

இந்நிலையில் இளைஞர் குழுவை தாக்கிய சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம், விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் பிரதான சந்தேகநபரான பெண் தலைமறைவாக இருந்த நிலையில் கைது செய்துள்ளனர்.

அதனைத் தொடர்ந்து முன்னெடுத்த விசாரணைகளின் அடிப்படையில் மேலும் மூன்று பெண்களையும் ஒரு ஆணையும் கைது செய்துள்ளனர்.

அதேவேளை சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் சில பெண்கள் தலைமறைவாக உள்ள நிலையில் அவர்களையும் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ம-33)

## கோவிட்...

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,324 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 25 பெண் களும் 41 ஆண்களும் உள்ளடங்குவதாக அரசாங்க தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## நாளாந்த...

டின் மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 304,161 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம)

## கால்வாயில்...

உயிரிழந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இச்சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த 43 வயது உடைய ஆறுமுகம் சதீஷ்குமார் என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

## விபரீத...

உட்பட்ட மணியம்குளம் ஸ்கந்தபுரம் பகுதியில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அதிக மதுபோதையின் காரணமாக குறித்த குடும்பஸ்தர் நேற்று தூக்கிட்டு தற்கொலை செய்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் செல்லமுத்துகுமார் (வயது - 56) என்பவரே உயிரிழந்தவராவார். இது தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-316)

## வடக்கில் 79...

பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

யாழ்.மாவட்டத்தில் 50 பேர், வவுனியா மாவட்டத்தில் 15 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் 06 பேர், முல்லைத்தீவு மாவட்டத்தில் 05 பேர், மன்னார் மாவட்டத்தில் ஒருவர், ஏனையவர்கள் தனிமைப்படுத்தல் முகாமில் அடையாளப் படுத்தப்பட்டனர் (ம)

## கொரோனா...

அத்துடன், தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் பணியாற்றும் அச்சுவேலியைச் சேர்ந்த 44 வயதுடைய ஒருவர் நேற்று நண்பகல் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தார்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 126ஆக உயர்வடைந்துள்ளது. (ம-33)

## கோவிட் - 19...

யவரே கொரோனாத் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த 21ஆம் திகதி சளி, தொண்டை இருமல், காய்ச்சல் காரணமாக முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார். (ம-281)

## சுன்னாக தோட்ட...

ஊரெழுவைச் சேர்ந்த இராசதுரை சுதாகரன் (வயது - 36) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த தோட்டக் கிணற்றில் சடலம் காணப்படுவதாக சுன்னாகம்பொலிஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் குறித்த பகுதிக்கு சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டுள்ளனர்.

சடலம் உருக்குலைந்த நிலையில் காணப்படுவதனால் சில தினங்களுக்கு முன்னரே இவர் உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (ம-33,60)

## 40 ஆயிரத்துக்கு...

சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நேற்று வியாழக்கிழமை வடமாகாணத்தில் சினோபார்ம் 1ஆவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்றன.

இந்தத் திட்டத்தின் கீழ் 30 வயதிற்கு மேற்பட்டவர்களிற்கு தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

நேற்று யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 18 ஆயிரத்து 39 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 5 ஆயிரத்து 110 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 7 ஆயிரத்து 865 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 9 ஆயிரத்து 377 பேருக்குமாக வடமாகாணத்தில் மொத்தமாக 40 ஆயிரத்து 391 தடுப்பூசிகள் வழங்கப்பட்டன. (ம-33)

## தடுப்பூசி...

ஒழித்து திரிவோரை கிராமசேவையாளர் ஊடாக கண்டறிவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றில் இருந்து பாதுகாப்பாக இருக்க தடுப்பூசியே ஒரே வழி என சுகாதார தரப்பு தெரிவித்துள்ள நிலையில் இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-3)

## காணி அபகரி...

முல்லைத்தீவு - முள்ளிவாய்க்கால் கிழக்கு கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட வட்டுவாகல் கிராமத்தில் பொதுமக்களுக்கு சொந்தமான 617 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை அங்குள்ள கோட்டாபய ராஜபக்ஷ கடற்படை முகாமுக்காக அபகரிக்க முன்னெடுக்கப்படும் முயற்சிகளுக்கெதிராக கோட்டாபய ராஜபக்ஷ கடற்படை முகாமுக்கெதிராக எதிர்ப்பு நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த கடற்படை முகாமிற்கான காணி அபகரிப்பு நடவடிக்கைக்காக அப்பகுதிக்கு நிலஅளவை திணைக்கள அதிகாரிகள் சென்றுள்ள நிலையில் அங்கு காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் இணைந்து காணி அளவீடு செய்ய வேண்டாம் என்ற கோரிக்கையை முன்வைத்து எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால் குறித்த பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

3 மணி நேரம் தொடர்ந்த போராட்டத்தை அடுத்து முல்லைத்தீவு நில அளவைத் திணைக்கள அதிகாரியும் முல்லைத்தீவு மாவட்ட மேலதிக அரச அதிபரும் வந்து காணி அளவீடு எதுவும் இன்று (நேற்று) நடைபெறவில்லை என்றும் எதிர்வரும் வாரம் அதுகுறித்த கலந்துரையாடல் நடைபெற்று அதன் பின்னரேயே இறுதி முடிவு எடுப்பதாகவும் தெரிவித்த நிலையில் மக்கள் அங்கிருந்து கலைந்து சென் றுள்ளனர்.

ஏற்கெனவே 3 தடவைகள் இவ்வாறான காணி அளவீட்டு முயற்சிகள் மக்கள் எதிர்ப்பால் கைவிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-281)


தன நிதானய
திகதி - 2021.07.29
சீட்டிழுப்பு இலக்கம் - 550
H 09 17 60 62
ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கங்கள்

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29.07.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2815
ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கங்கள் 18 20 47 60
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/07/29
சீட்டிழுப்பு இலக்கம் 4520
ஆங்கில எழுத்து X | வெல்லப்பட்ட இலக்கங்கள் 8 7 0 3 4 9
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 29/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0868
G 13 39 47 65 78

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 29/07/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1127
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 5 0 4 0 3 3
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1323
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 29.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 51,694,922
வெற்றி இலக்கங்கள் 34 49 51 61 X
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா
கிழமை: வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3056
வர்ணம்: சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 29.07.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 31,204,738
வெற்றி இலக்கங்கள் 16 38 42 72 P
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி
சுப்பர் ஜக்பொட் 2,376,604/=
திகதி: 29.07.2021
வெற்றி வாரம்: 3209
வர்ணம்: மண்நிறம்
வெற்றி இலக்கங்கள் 06 13 49 52 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 9,799,120/=

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1497 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 29/07/2021 | தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் G 16 17 24 44
அடுத்த சுப்பர் ஜக்பொட 60,919,206/=

சம்பத வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 440 | திகதி 29.07.2021 | வர்ணம் நீலம்
ஆங்கில எழுத்து W | வெற்றி இலக்கங்கள் 61 63 69 | விதி எண் 2
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 13,473,148
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி விபத்துக்குள்ளான அனந்தி சசிதரன்

(யாழ்ப்பாணம்)

தான் வீதியில் பயணித்துக்கொண்டிருந்தபோது நபர் ஒருவர் மோட்டார் சைக்கிளால் மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ள தாகவும் அவர் மீது பொலிஸார் நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக் கையில்,

வட்டு. இந்துக்கல்லூரிக்கு முன்பாக நேற்று முன்தினம் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்தபோது இன் னொரு மோட்டார் சைக்கிளில் வந்த நபர் மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு தப்பிச் சென்றுவிட்டார்.

விபத்தினால் பலத்த பாதிப்புக்களை சந்தித்த நான், வட்டுக் கோட்டை பொலிஸ் நிலையத் துக்குச் சென்று விபத்துத் தொட ர்பில் முறைப்பாடு ஒன்றை பதிவு செய்தது டன் விபத்தை ஏற்படுத்திய மோட்டார் சைக்கிள் இலக்கத்தினையும் அறிவித்திரு ந்தேன்.


இருந்தபோதிலும் பொலிஸார் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று அனந்தி தெரிவித்தார். (ம)

# தென்னிலங்கையில் வசித்து வருகின்ற சீன நாட்டு பிரஜை ஒருவரும் வட்டுவாகல் முகாம் முன் போராட்டம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு, வட்டுவாகலில் கடற்படைக்கு தேவையான பொதுமக்களின் காணி அபகரிப்பு நேற்று நடைபெறவிருந்த நிலையில் பொதுமக்களின் எதிர்ப்பால் காணி அபகரிப்பு கைவிடப்பட்டது இந்நிலையில்,

தென்னிலங்கையில் வசித்து வருகின்ற சீன நாட்டவர் ஒருவருக்கு வட்டுவாகலில் கோட்டாப கடற்படை முகாம் அமைந்துள்ள பகுதியில் சுமார் 49 ஏக்கர் காணியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



அந்த சீன நாட்டைச் சேர்ந்தவர் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற பகுதிக்கு வருகைதந்து தனது காணிகளுக்குரிய நட்டஈட்டைப் பெறுவதற்கும், இதுவரை காலம் அங்கு கடற்படை இருந்து தனது காணியைப் பயன்படுத்தியமைக்கான நட்டஈட்டைப் பெறுவதற்கும் கட்டாயம் அங்கு நில அளவீடு இடம்பெறவேண் டும் என வலியுறுத்தினார்.

குறித்த நபரின் இத்தகைய கருத்திற்கு அங்கிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தமது கடுமையான கண்டனங்களை வெளியிட்டிருந்தனர். வடமாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன், சீனச் சிங்களவர் அங்கிருந்து வெளியேறவேண்டும் என கோசம் எழுப்பியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஏனைய ஆர்ப்பாட்டக்காரர்களும் குறித்த நபர் அங்கிருந்து வெளியேற வேண்டுமெனக் கோசம் எழுப்பியதைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட இடத்திலிருந்து அந்நபர் வெளியேறியிருந்தார். (ம)


கனடா-STUDENT VISA
A/L எடுத்த மாணவர்கள் குறைந்த செலவில் கனடாவில் கல்வி கற்க இலவச ஆலோசனைகள்/அனுமதிகள் மற்றும் விசா ஏற்பாடுகள். (C-2385)
IELTS இலவசமாக கற்பிக்கப்படும்
VISA APPLICATION
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
0777-068-777

AGX
ஏற்றுமதியாளர்கள்
ஆகாய,கடல் மார்க்கமாக வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
கனடா 650/=
லண்டன் 975/=
(C-2386)
இல. 216, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
076 443 1578

A/L மூன்று மாதங்களே PP
வீடு வரல்/ இரு மொழிகளிலும்
CHEMISTRY சிங்கம் மாஸ்டர்
076 056 5786
Biology வித்யா சேர் (7485)
077 665 5290

காண்டம் பார்த்தல்
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (7490)
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

அண்ணா EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= (C-2384)
070 3305500
077 888 9388
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

விரைவு பொதிகள் சேவை
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-2383)
0768226240 DHL


## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 29 |
| 04 | 07 |
| 1982 | 2021 |

### சிவஞானசுந்தரம் காந்தமயூரன் (மயூரன்)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 29, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் காந்தமயூரன் (மயூரன்) நேற்று (29.07.2021) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவஞானசுந்தரம் - காலஞ்சென்ற நித்தியலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தேவதாசன் - கலைமகள் தம்பதியரின் அன்பு மருமகனும் கமலலோஜினியின் அன்புக் கணவரும் அனித்தன், சாருஜன், கீர்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் காந்தரோகினி, சிவாயினி, கிஷாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் பிரபாகரன், கபில்தாஸ், பரணிதரன், கரன், விஜயன், கமல், சர்வா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (30.07.2021) வியாழக்கிழமை இல. 29, சிவன் பண்ணை வீதி, கொட்டடியில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 1.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*(கோவிட் -19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக நடைபெறும்.)* (7492)

இல. 29. சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
077 288 0152
077 623 4204
077 468 3354
தகவல்:- குடும்பத்தினர்


**Noble papers...**
**Join our Team....**
**Noble Internationl Papers Lanka (pvt) Ltd**



**பணிநிலை வேண்டுகை**

**தொழிற்சாலை உதவி மேற்பார்வையாளர்**

கல்வித் தகுதி :- ◆GCE O/L 6 பாடம் சித்தி அல்லது தொழிற்சாலை மேற்பார்வையாளராக குறைந்தது ஐந்து வருட அனுபவம்.
◆தொழில்நுட்பம் சார்பான இயந்திரவியல், மின் இணைப்பு மேலதிக தகுதியாகக் கருதப்படும்.
வயதெல்லை :- 30 வயதில் இருந்து 50 வயதிற்குள் விரும்பத்தக்கது.
◆சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**தொழிற்சாலை ஊழியர்**

கல்வித் தகுதி :- GCE O/L - 6 பாடம் சித்தி.
வயதெல்லை :- 20 வயதில் இருந்து 40 வயது வரை விரும்பத்தக்கது. தொழிற்சாலைகளில் வேலை செய்த அனுபவம் மேலதிக தகுதியாகக் கருதப்படும்.

மேற்கூறப்பட்ட பணிநிலைகளுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் திங்கட்கிழமை 2/8/2021 காலை 10.00 மணியளவில் தொழிற்சாலை அலுவலகத்தில் நடைபெறும். பணிபுரிய ஆர்வமுடையவர்கள் குறித்த ஆவணங்களுடன் நேரில் சமூகம் தரவும்.

**நிர்வாகம்**
**கைத்தொழில் பேட்டை**
**அச்சுவேலி.** (7488)
**021 221 3000**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.07.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.